# வானவில்

**VAANAVIL**

இதழ் 162 ஆனி 2024

ISSUE 162 June 2024


# மூன்றாம் உலகப் போருக்கு வாய்ப்புண்டா?

உலகம் இன்று கொந்தளிப்பான ஒரு நிலையில் இருக்கின்றது. அதற்குக் காரணம் உலகத்தின் சில முக்கியமான பகுதிகளில் நடைபெற்று வரும் பிராந்திய அளவிலான போர்கள்தான். இந்தப் போர்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டு உலகப் போராக, அதாவது மூன்றாம் உலகப் போராக உருவெடுக்குமா என்ற அச்சம் உலக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அந்த அச்சத்தை மேலும் ஊதிப்பெருக்க வைப்பது போல உலகளாவிய கோப்பரேட் ஊடகங்கள் (Corporate Media) செய்திகளை வெளியிட்டும் வருகின்றன.

முதலாம் உலகப் போர் 1914 முதல் 1918 வரை நான்கு ஆண்டுகள் நடைபெற்றது. இந்தப் போர் பெரும்பாலும் ஐரோப்பாவிலேயே நடைபெற்றது. ஐரோப்பாவில் இருந்த ஓரளவு வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகள் மற்றைய நாடுகளைத் தங்களுக்குள் பங்கு போட எடுத்த முயற்சியின் காரணமாகவே முதலாம் உலகப் போர் ஆரம்பமானது.

இரண்டாம் உலகப் போர் 1939 முதல் 1945 வரை ஆறு ஆண்டுகள் நடைபெற்றது. இந்தப் போரை ஹிட்லரின் நாஜி ஜெர்மனியே ஆரம்பித்தது. ஹிட்லரின் பிரதான நோக்கமாக உலகின் முதலாவது சோசலிச நாடான சோவியத் யூனியனை அழிப்பது இருந்தது. ஆனால் ஹிட்லர் சோவியத் யூனியனை அழிப்பதுடன் மட்டும் நிற்காது ஐரோப்பாவில் சில நாடுகளைக் கைப்பற்றும் பேராசையிலும் செயல்பட்டான். அதேபோல, ஹிட்லருடன் கூட்டுச் சேர்ந்த யப்பானிய ஏகாதிபத்தியம் ஆசியாவில் பல நாடுகளைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கியது.

அதன் காரணமாக, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஏகாதிபத்திய நாடுகள் சோவியத் யூனியனுடன்



சேர்ந்து ஹிட்லருக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் மூலம் ஹிட்லரினதும் யப்பானிய ஏகாதிபத்தியத்தினதும் ஆக்கிரமிப்பு முயற்சிகள் முறியடிக்கப்பட்டு அவை தோற்கடிக்கப்பட்டன.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்கா அதுவரை உலகின் முதல்தர ஏகாதிபத்தியமாக இருந்த பிரித்தானியாவை பின்னுக்குத் தள்ளிவிட்டு அதன் இடத்தை தான் எடுத்துக் கொண்டது. அதன் மூலம் அமெரிக்கா உலக மக்களின் பொது எதிரியாக மாறியது.

அமெரிக்கா உலகின் முதல்தர ஏகாதிபத்தியமாக வளர்ந்த பின்னர், கொரியாவிலும் (1950–51) வியட்நாமிலும் (1965–75) ஆக்கிரமிப்பு யுத்தங்களில் ஈடுபட்டது. ஆனால் இரண்டிலும் தோற்கடிக்கப்பட்டது.

அதன் பின்னர் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் இராணுவக் கூட்டணியான ‘நேட்டோ’வுடன் இணைந்து யூகோஸ்சிலோவாக்கியா, ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் மீது தாக்குதல் தொடுத்து அந்த நாடுகளில் இருந்த தனக்குப் பிடிக்காத அரசுகளை அகற்றியது. சிரியாவிலும் அவ்வாறு செய்ய முயன்றபோதும், ரஸ்யா சிரியாவுக்கு பக்கபலமாக நின்றதால் அது சாத்தியமில்லாது போய்விட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவும், அதன் நேச அணியான நேட்டோ நாடுகளும் பல நாடுகளில் இராணுவத் தாக்குதல்களை நிகழ்த்தினாலும், அவை உலக யுத்தமாக மாற்றமடையவில்லை.

இன்னொருபுறம் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் பல ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் தமது தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்ததால், பல நாடுகளில் மேற்கத்தைய நாடுகளின் காலனித்துவ ஆட்சிகள் முடிவுக்கு வந்தன. புதிய சுதந்திர நாடுகள் தமது தேசிய சுதந்திரத்தையும் பொருளாதாரத்தையும் ஸ்திரப்படுத்த முயன்றதால், ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல் அமைப்பு தகர்ந்து அவை கணிசமான அளவு பலவீனப்படும் நிலைமையும் உருவானது. இந்த நிலையைப் பயன்படுத்தி அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுக்கும் தானே தலைவனாகிக் கொண்டது.

லெனின் அவர்கள் குறிப்பிட்டது போல, “ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம்” என்பதற்கு ஏற்ப,

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ‘பிரிக்ஸ்’: யுரேசியா + தெற்குலக நாடுகள்

உலகில் வளர்ந்துவரும் முக்கிய பொருளாதார நாடுகளாகக் கருதப்படும் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய 5 நாடுகள் இணைந்து 2010 இல் ‘பிரிக்ஸ்’ என்ற கூட்டமைப்பை உருவாக்கினார்கள். பிரிக்ஸ் (BRICS: 5 நாடுகளினதும் பெயர்களின் முதலெழுத்துகளின் இணைவு) என்ற அமைப்பு உருவாகுவதற்கு 4 ஆண்டுகள் முன்பாகவே (2006) தென் ஆபிரிக்கா தவிர்ந்த ஏனைய 4 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் தங்களுக்கிடையில் பரஸ்பர பொருளாதாரக் கூட்டிணைவை ஏற்படுத்துவதற்காக ரஷ்யாவில் சந்தித்து பேசியிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து இந்த நாடுகளின் தலைவர்கள் 2008 இலும் 2009 இலும் சந்தித்துப் பேசி ‘பிரிக்’ (BRIC) நாடுகளென இணைந்தார்கள்.

முன்னதாக, பொருளாதார ரீதியாக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா, 2050 இல் உலகப் பொருளாதாரத்தில் கூட்டாக ஆதிக்கம் செலுத்துமென, கோல்ட்மன் சாக்ஸ் (Goldman Sachs) என்ற அமெரிக்க நிறுவனத்தின் தலைமைப் பொருளியலாளராக இருந்த ஜிம் ஓ’நெயில் (Jim O'Neill), 2001 இல் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்திருந்தார். இந்த நாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு ‘பிரிக்’ என்கிற பதத்தை முதலில் பயன்படுத்தியதே அவர்தான்.

உலக மக்கள்தொகையில் ‘பிரிக்ஸ்’ நாடுகளின் பங்கு 41.5% உலக ஒட்டுமொத்த நிலப்பரப்பில் 26.7%. மக்கள்தொகை, நிலப்பரப்பு, மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகியவற்றில் உலகளவில் முதல் பத்து இடங்களுக்குள் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் உள்ளன. உலக ஜிடிபி (GDP) இல் ‘பிரிக்ஸ்’ நாடுகளின் பங்களிப்பு 32%. அதேவேளையில் ஜி-7 நாடுகளின் பங்களிப்பு 30%.

உலக ஒழுங்கில் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகளின் மேலாதிக்கத்தை தகர்க்கவே ‘பிரிக்ஸ்’ உருவாக்கப்பட்டதாக மேற்கத்திய நாடுகள் கருதி வருகின்றன. சீனா, இந்தியாவிற்கிடையிலான முரண்பாட்டை முன்வைத்து, பல முக்கியமான விடயங்களில் ‘பிரிக்ஸ்’ நாடுகளின் கருத்துகள் வெவ்வேறானவை என அவர்கள் கூறுகின்றார்கள். மேலும் ‘பிரிக்ஸ்’ குறித்து மேற்கத்திய ஊடகங்கள் இது வளர்ந்த நாடுகளின் அமைப்பான ஜி-7 அமைப்பிற்கு போட்டி அமைப்பெனவும் தொடந்து எழுதி வருகின்றன. ஆனால், ‘பிரிக்ஸ்’ நாடுகள் ஆரம்பம் முதலே, எந்த ஒரு கூட்டணிக்கும் எந்த ஒரு நாட்டிற்கும் எதிரான ஓர் அமைப்பு அல்ல, ‘நேட்டோ’ போன்ற இராணுவக் கூட்டுக்கும் எதிரானதில்லை என்று தெளிவாகச் சொல்லி வருகின்றார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் சுழற்சி முறையில் ‘பிரிக்ஸ்’ நாடுகள் தலைமைப் பொறுப்பு ஏற்றுவரும் நிலையில், 2023 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்கா தலைமை வகித்தது. அந்த வகையில், ‘பிரிக்ஸ்’ கூட்டமைப்பின் 15 ஆவது ஆண்டுக் கூட்டம், அந்நாட்டின் ஜோகனஸ்பேர்க் (Johannesburg) நகரில் கடந்த வருடம் ஓகஸ்ட் 22 முதல் 24 வரை நடைபெற்றது. அந்த உச்சி மாநாட்டில் ரஷ்யா 2024 ஆம் ஆண்டிற்கான தலைமைப் பொறுப்பை ஏற்று, 16 வது உச்சி மாநாட்டை ஒக்ரோபர் 22-24 ஆம் திகதிகளில் ரஷ்யாவின் கஸான் (Kazan) நகரில் நடாத்தவுள்ளது.

ஜோகன்னஸ்பர்க் உச்சி மாநாட்டில், இணையவழியில் கலந்து கொண்ட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், “மேற்குலக நாடுகளின் ஆதிக்கத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற வெறியே உக்ரைனின் நெருக்கடிக்கு காரணம்” என்றும், உடனடியாக அப்போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார். மேற்குலக நாடுகளின் பல நூற்றாண்டு கால ஆதிக்கத்தை சுட்டிக் காட்டிய அவர், ‘பிரிக்ஸ்’ நாடுகள் அனைத்து வகையான மேலாதிக்கத்திற்கும் எதிரானவர்கள் என்று குறிப்பிட்டார். மேலும் மேற்குலக நாடுகள் உக்ரைனில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை கவிழ்க்க சதி செய்தனர் என்றும், பின்னர் சதிக்கு ரஷ்யா உடன்படாததால் கொடூரமான போரை தூண்டிவிட்டு அழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அமுலுக்கு வரும் வகையில், ஆர்ஜென்ரீனா, எகிப்து, எதியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளை ‘பிரிக்ஸ்’ அமைப்பின் முழுநேர உறுப்பினர்களாக இணைக்கவுள்ளதாக ஜோகனஸ்பேர்க் உச்சி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. ஆனால் பின்னர் ஆர்ஜென்ரீனாவின் அமெரிக்க சார்பு புதிய ஜனாதிபதி அதிலிருந்து விலகிக் கொண்டார். புதிதாக இணைந்த ஐந்து நாடுகளுடன் தற்போது ‘பிரிக்ஸ்’ நாடுகளின் எண்ணிக்கை 10. கியூபா, வெனிசுவேலா, பொலிவியா, இந்தோனேசியா, அல்ஜீரியா, துருக்கி, கஸகஸ்தான். உட்பட 35 இற்கும் மேற்பட்ட நாடுகள் பிரிக்ஸில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக ஈரான்-சவூதி அரேபியா, மற்றும் எகிப்து-எத்தியோப்பியா ஆகிய நாடுகளுக்கிடையே பகைமையை அமெரிக்கா - பிரிட்டன் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் குறையாமல் பார்த்துக் கொண்டன. தற்போது ‘பிரிக்ஸ்’ அமைப்பு அந்த நாடுகளை, தங்களின் பழைய விரோதங்களை மறந்து, தங்கள் நாட்டு வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கும் நிலைக்கு கொண்டு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பூகோள அரசியலின், பூகோளவியல் சார்ந்த பொருளாதாரத்தின் மிகமுக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் ‘பிரிக்ஸ்’ உருவாக்கம் பெற்று, விரிவாக்கம் அடைந்து வருகின்றது. இந்த அமைப்பு உலகளாவிய நவதாராளவாதத்திற்கு எதிராக தோற்றம் பெற்றது. இதனால் மேற்குலக நாடுகள், ரஷ்யா-சீனா உலகை ஆதிக்கம் செலுத்தும் நோக்கில் பிரிக்ஸைப் பயன்படுத்துவதாக பிரச்சாரங்கள் செய்து, இந்த அமைப்பைச் சிதைப்பதற்கு சகல பிரயத்தனங்களையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** *sunvaanavil@gmail.com*
*‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**


***இணையத்தளம்:*** *http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து ‘வானவில்’ இதழ்களையும் வாசிக்கலாம்.*

# அமெரிக்காவில் மனித உரிமை நிலபரங்கள்!

சீன அரசாங்கம் அமெரிக்காவின் மனித நிலபரங்கள் பற்றிய விபரங்களை வருடா வருடம் வெளியிட்டு வருகின்றது. இது ஒரு வகையில் சீனா உட்பட தனக்குப் பிடிக்காத நாடுகள் குறித்து அமெரிக்கா வருடாவருடம் வெளியிட்டு வரும் 'மனித உரிமைகள்' பற்றிய அறிக்கைக்கு பதிலடியாக அமைகிறது.

அந்த வகையில், அமெரிக்காவின் 2023ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் பற்றிய அறிக்கையை சீன அரசாங்கம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் சாதாரண அமெரிக்க மக்களின் குடியியல் (Civic) மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய விபரங்கள், அமெரிக்காவில் ஆழமாகப் புரையோடிப் போயுள்ள இனவாதம், பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மை, பெண்கள் – குழந்தைகள் மீதான உரிமை மீறல்கள், குடிவரவாளர்களின் மீதான மனித நேயமற்ற தாக்குதல்கள், அமெரிக்க மேலாதிக்கம் உருவாக்கியுள்ள மனிதநேய நெருக்கடி போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில், பிரதானமாக அமெரிக்காவில் அரசாங்கத்தின் செயல்பாட்டுத் தோல்வியினால், மனித உரிமைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன, அரசியல் கட்சிகள் நெருக்கடியில் சிக்கியுள்ளன, குடியியல் உரிமைகளும் அரசியல் உரிமைகளும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, அமெரிக்கா மனித உரிமை விடயங்களை மிகவும் முக்கியமானதாகப் பேசி வந்தாலும், அங்கு எல்லா உரிமைகளையும் அரசியல், பொருளாதார, சமூக அதிகாரம் உள்ள மக்கள் தொகையின் ஒரு சிறிய சக்தியே அனுபவித்து வருகிறது, அதே நேரத்தில் ஏகப் பெரும்பான்மையான மக்கள் எதுவும் இல்லாமல் ஒதுக்கப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




சீனா வெளியிட்டுள்ள அமெரிக்காவின் மனித உரிமை நிலபரங்கள் பற்றிய அறிக்கையில் பின்வரும் முக்கிய விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன:

2023இல் அமெரிக்காவில் 654 வரையிலான பெரிய அளவிலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஏறத்தாழ 43,000 பேர் இறந்துள்ளனர். அதாவது, சராசரியாக ஒரு நாளைக்கு 117 பேர் வீதம் இறந்துள்ளனர்.

2023 புள்ளிவிபரத்தின்படி, அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்களில் (States) 27 மாநிலங்களில் நபர் ஒருவர் துப்பாக்கி ஒன்றை எடுத்துச் செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வைத்திருக்கத் தேவையில்லை. இதுவும் அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாச்சாரம் தலைவிரித்தாடுவதற்கு ஒரு காரணமாகும். மாணவர்கள் பாடசாலைக்கு துப்பாக்கிகளை எடுத்துச் செல்வதும், அங்கு சக மாணவர்களுடன் ஏற்படும் அற்ப சச்சரவுகளுக்காக துப்பாக்கியைப் பயன்படுத்துவதும் அமெரிக்காவில் சர்வசாதாரணம். அதேபோல, வழிபாட்டுத்தலங்களுக்குச் செல்லும் சிலரும் துப்பாக்கியை எடுத்துச் செல்கிறார்கள்.

அமெரிக்காவில் பொதுமக்களின் தனிப்பட்ட விவகாரங்களைக் கண்காணிக்கும் உரிமையை அரசாங்கம் துஸ்பிரயோகம் செய்து வருகிறது. சுதந்திரப் பேச்சுரிமையும், கருத்துச் சுதந்திரமும் நசுக்கப்படுகிறது. கடந்த 20 வருடங்களில் இல்லாத அளவுக்கு அமெரிக்க கல்லூரி வளாகங்களில் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவித்த பலர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் அல்லது தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2023இல் பொலிஸ் கொடூரத்தினால் குறைந்தபட்சம் 1,247 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதாவது, நாளொன்றுக்கு மூன்று பேர் வீதம் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் இந்த மரணங்களில் அரைவாசிவரை, “பொதுவான கொலைகள் அல்லது தற்கொலை” என முத்திரையிடப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டுக்குப் பின்னர் வீடற்றவர் தொகை 650,000 வரை எட்டிப் பிடித்துள்ளது. போதைவஸ்துப் பாவனையும், தற்கொலை நிகழ்வுகளும் அதிகரித்துள்ளன.

அண்மைக்காலங்களில் பாதுகாப்புப் படையினருக்கும், பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கும் இடையிலான மோதல்கள் அதிகரித்துள்ளன. 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ள தகவலின்படி, அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 2,900 வரையிலானோர் கைது செய்யப்பட்டோ அல்லது தடுத்து வைக்கப்பட்டோ உள்ளனர்.

இந்த மாணவர்கள் அமெரிக்காவில்

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...**

# இந்திய - இலங்கை தரைவழி இணைப்பு பேருவகையானது!

## -இந்திய உயர் ஸ்தானிகர்



*இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஸ் ஜா (Santos Jha) கொழும்பில் தேர்ந்தெடுத்த சில ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அப்பொழுது கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும்.*

*'டெயிலி மிரர்' சார்பாக தொகுத்தளித்தவர் கெலும் பண்டார (Kelum Bandara)*

**கேள்வி:** இங்கு நீங்கள் உயர் ஸ்தானிகராகப் பதவி ஏற்று நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. உங்களை ஆரம்பத்தில் கவர்ந்தவை எவை?

**பதில்:** பாரிய பொறுப்பை வகிப்பதற்காக இலங்கைக்கு இந்திய உயர் ஸ்தானிகராக வந்தது என்னைப் பொறுத்தவரை சொந்த வீட்டுக்கு வந்தது போலாகும். நான் இங்கு 2007 – 10 காலப்பகுதியில் கவுன்சிலராக (Counsellor) இருந்திருக்கிறேன். இலங்கை எப்பொழுதும் எனது நெஞ்சுக்கு நெருக்கமாக இருப்பதுடன், இங்கு பல நண்பர்கள் என் வாழ்க்கையுடன் இணைந்தும் இருந்திருக்கிறார்கள்.

நான் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று அரசியல், வர்த்தக, ஊடக, கல்வி போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களைச் சந்தித்த போது அவர்களது அன்பான வரவேற்பைப் பெற்றேன்.

இந்திய – இலங்கை ஒத்துழைப்பைப் பொறுத்தளவில் – குறிப்பாக பொருளாதார ஒத்துழைப்பில் ஒருமனதான ஆர்வமிருப்பது என்னைக் கவர்ந்துள்ளது. நான் சென்ற இடங்களில் எல்லாம் இந்திய – இலங்கை ஒத்துழைப்பிற்கும் செழிப்புக்குமான நிலையிருப்பதைக் கண்டேன். இலங்கை தற்பொழுது தனது பொருளாதார மீட்சி, ஸ்திரப்படுத்தல், மீளமைப்பு, வளர்ச்சி என்பனவற்றில் இருப்பதால், இந்தியாவின் தேசிய வளர்ச்சியின் வல்லமை காரணமாக இரு தரப்பும் ஆழமான பரஸ்பர ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

**கேள்வி:** 2000 ஆண்டுகளில் நீங்கள் இங்கு ஒரு கவுன்சிலராக இருந்தது சுவாரசியமானது. இந்திய ~ இலங்கை உறவில் ஒரு வளைவு சுழிவான போக்கை காணக்கூடியதாக உள்ளதா?

**பதில்:** நல்லது, நிச்சயமாக. எமது உறவுகள் முன்னெப்போதையையும் விட இன்று சிறப்பாக உள்ளது. ஆனால், சில விடயங்கள் ஒருபோதும் மாறவில்லை, சிலது மாறியுள்ளன. நான் பெற்ற அன்பும் வரவேற்பும் விசேடமானது. இது மக்களுக்கிடையிலான வலுவான கலாச்சார உறவுகளைப் பிரதிபலிக்கும் விசேட அம்சமாகும். இந்திய ~ இலங்கை உறவானது முன்பும் இப்பொழுதும் இலங்கை மக்களின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. மற்றது, இது ஒருபோதும் மாறுவதில்லை. ஆனால், மொத்தமாக ஒத்துழைப்பின் தூரமும் அளவும் தரம் வாய்ந்ததாகச் செல்கின்றது.

எனது முன்னைய பணிக்காலத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட இரு நாடுகளுக்குமிடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு 25 மாவட்டங்களில் பல்வேறு வகைப்பட்ட 60 திட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளது.

அதே நேரத்தில் இந்த ஒத்துழைப்பு மக்களின் தேவைகளிலும் முன்னுரிமைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 2023 யூலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய வருகையின் போது பிரதமர் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட தூரநோக்கு ஆவணம், நீண்டகால ஒத்துழைப்புக்கு ஒரு அடிப்படையை உருவாக்கியுள்ளது. இநத அடிப்படை இரு நாடுகளினதும் செழிப்புக்கு வலுவூட்டுவதாயுள்ளது.

**கேள்வி:** இந்தியா நேரம் பார்த்துச் செய்த 4 பில்லியன் டொலர் உதவியும், கடன் சீரமைப்புக்குச் செய்த உதவியும், நட்புறவுக்கான ஆழமான அடிப்படையாகும். இலங்கையின் கடன் மறு சீரமைப்பில் பாரீஸ் கிளப் நாடுகள் வகித்த பங்கில் தீவிரமாகப் பங்குபற்றியதற்கு மேலதிகமாக தனிப்பட்ட கடன் வழங்குனர்களின் கடன் மறுசீரமைப்பில் இந்தியாவின் உதவிகள் வேறு என்னென்ன வழிகளில் உள்ளன?

**பதில்:** இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானபோது, இலங்கையை ஆதரிப்பதில் இந்தியா முன்னணிப் பாத்திரம் வகித்தது. வொசிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதிய கூட்டங்களின் போது இந்தியா இலங்கையின் சார்பாக ஆதரவு தெரிவித்தது. அத்துடன், சர்வதேச நாணய நிதியத்திற்கு முதல் கடன் வழங்குநராக உத்தரவாதமளித்தது அல்லது உத்தியோகபூர்வமான கடன் வழங்குநர்கள் குழுவுக்கு யப்பான் மற்றும் பிரான்சுடன் சேர்ந்து இணைத்தலைமை வகித்தது. அத்துடன், இந்தியா 4 பில்லியன் கடன் உதவியை வழங்கியதுடன், இலங்கைக்கு தேவையான பெருமளவு உணவு, எரிபொருள், மருந்துகள் என்பனவற்றை வழங்கிய முதல் நாடாகவும் இருந்தது.

தற்பொழுது இலங்கை அரசாங்கம் தனிப்பட்ட கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்புச் சம்பந்தமான

விதிகள், நிபந்தனைகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. நாம் தொடர்ந்தும் இந்த விடயங்கள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் ஈடுபாடு கொண்டிருப்பதுடன், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப எந்த வழிகளிலும் அதற்கு உதவுவதற்கும் தயாராக இருக்கின்றோம்.

**கேள்வி:** 2023 யூலையில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் போது, இந்திய – இலங்கை தலைவர்களின் செயற்பாடுதான் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால பொருளாதார ஒத்துழைப்பிற்கான ஊக்கி என்பதை அடையாளம் காண முடிந்தது. அந்த தூரநோக்கு நடைமுறையாக எவ்வாறு மாறும் என நீங்கள் பார்க்கிறீர்கள்? உங்கள் பார்வையில் அதன் முன்னெற்றம் என்ன?

**பதில்:** இந்தியாவும் இலங்கையும் நாகரீக உறவுகளிலும், புவியியல் அமைவு ரீதியிலும், கலாச்சாரத் தொடர்புகளிலும் நீண்டகால நல்லெண்ணங்களையும், முன்னேற்றங்களையும் நிகரில்லாது கொண்டுள்ளன. எமது புவியியல் அமைவிடம் இயற்கையாகவே பல முன்னேற்றங்களை உறுதிப்படுத்துகின்றது. இன்று இந்தியாவின் வளர்ச்சி இலங்கைக்கு சிறந்த சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. உலகளாவிய வளர்ச்சியில் நீங்கள் உறுதியாக வளர்ந்து வரும் ஒரு சக்தியாக இருப்பதுடன், இந்த முன்னேற்றத்தின் ஊடாக இலங்கை எமது விருப்பத்துக்குரிய பங்காளராகவும், நெருங்கிய அயலவராகவும் இருக்க வேண்டும் என விரும்புகிறோம். தூரநோக்கு ஆவணத்தில் எல்லாத்துறைகளிலும் – கடல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, வலுவூட்டல் மற்றும் சக்தி, வர்த்தகம், பொருளாதாரம், நிதி, மக்களிடையேயான உறவாடல் – தொடர்புகளையும், முன்னோக்கிப் போவதையும் இனம் கண்டுள்ளோம். இந்த துறைகளிலான முன்னேற்றம் ஊக்கமளிப்பவை.

இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக கடந்த வருடம் நாகபட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பித்துள்ளோம். இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கப்பல் சேவை குறித்தும் செயல்பட்டு வருகின்றோம். இந்திய விமான சேவை சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தினசரி விமான சேவைகளை நடத்தி வருகின்றது. வலுவூட்டல் மற்றும் சக்தி துறையைப் பொறுத்தவரையில், பலநோக்கு உற்பத்தி குழாய் இணைப்பின் செயல்பாட்டில் உள்ளோம். அத்துடன் தரை மார்க்கமான தொடர்பை ஏற்படுத்துவதில் நாம் முன்னேற்றம் கண்டு வருகின்றோம். காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்திக்காக அண்மையில் 61.5 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளோம். அத்துடன், இலங்கையின் துறைமுக மற்றும் விமான வசதிகளிலும் நாம் ஈடுபாடு கொண்டுள்ளோம்.

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான உடன்படிக்கை அல்லது 'எக்ரா' (ECTA) பற்றிய சுதந்திர வர்த்தக உடனபடிக்கையை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

கணிப்பொறி தொடர்பு இன்னொரு முக்கியமான விடயமாகும். யுபிஜ (UPI) சேவைகள் இந்த வருடத் துவக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், வர்த்தக கொடுப்பனவுகளை இந்திய தேசிய ரூபாயில் ஆரம்பித்துள்ளோம்.

மக்களுடன் மக்கள் தொடர்பாடல் நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. சுற்றாடல், யாத்திரை, கல்விசார் சந்தர்ப்பங்கள் என, எமக்கிடையிலான கலாச்சார தொடர்புகள் இதற்கான துறையைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

**கேள்வி:** நில இணைப்பு (Land Corridor) சம்பந்தமான திட்டத்தின் தற்போதைய நிலை என்ன? இது இரு நாடுகளுக்கும் என்ன விதமான பயன்களைக் கொடுக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

**பதில்:** நிலத் தொடர்பான திட்டம் பேருவகைமிக்கதும், மிகவும் தாக்கமானதுமான ஒரு திட்டம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். காட்சி மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இந்தத் திட்டத்தை நடைமுறையில் யதார்த்தமாக்குவதற்கான முதல்கட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

இந்தப் பாதை உருவாக்கப்பட்டதும், எமது அசைக்க முடியாத தொடர்பு மேலும் வலுவாவதுடன், எமது பெரும் மக்கள் தொகைக்கு செழிப்பைக் கொடுக்கும் புதிய சகாப்தம் உருவாகும். சிறிய வர்த்தகங்கள், சொல்வதானால், இலங்கையில் பெண்களால் உருவாக்கப்படும் பனைசார் கூடைகளை சிறிய லொறிகளில் ஏற்றி 30 – 40 கிலோ மீட்டர்களைத் தாண்டி 1.4 பில்லியன் மக்கள் தொகை கொண்ட சந்தைக்குக் கொண்டு செல்ல முடியும். நீங்கள் இப்பொழுது உற்பத்தி செய்பவற்றை மிகவும் வேகமாக விற்பனை செய்ய முடியும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட கொழும்பை தாண்டி நாட்டின் மற்றைய பகுதிகளுடனும் சுற்றுலாத்துறை வளர்ச்சி பெறும். அதே நேரத்தில் புகையிரதங்கள், வீதிகள், ஹோட்டல்கள், பொழுதுபோக்கு மற்றும் பூங்காக்கள் போன்ற உள்கட்டுமானத் துறைகளில் முதலீடுகள் அதிகரிக்கும். எமது கூட்டு நோக்கமான திரிகோணமலையின் சக்தி, கைத்தொழில் மற்றும் பொருளாதாரத் துறைகள் பிராந்தியக் கேந்திரமாக வளர்ச்சியைப் பெறும். இது இந்திய – இலங்கை உறவில் மாற்றத்தை உண்டுபண்ணும்.

**கேள்வி:** இலங்கையில் இந்திய நிறுவனங்களுக்கு வர்த்தக ஈடுபாடு அதிகரித்து வருவதை நாம் காண்கின்றோம். இந்திய தனியார்துறை இலங்கையை மீட்டெடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளதா?

**பதில்:** ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும்? கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கை மட்டுமின்றி, முழு உலகம் முழுவதற்கும் நெருக்கடியான காலமாக இருந்தது. அதே நேரத்தில் இந்தியா பெரும் வெளிநாட்டு முதலீட்டாளராக இலங்கையில் உருவெடுத்தது. இந்தக் காலகட்டத்தில் இந்திய அரசாங்கம் தொடர்ந்து இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவியது. அவற்றில் சில:

மாகோவில் இருந்து ஓமந்தை வரை புகையிரதப் பாதையை மேம்படுத்தியது, பொதுப் போக்குவரத்துக்கு பஸ்களை விநியோகம் செய்தது, பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கு விசேட வாகனங்களைக் கொடுத்தது. இவையெல்லாம் உணவு, எரிபொருள், மருந்து வகைகள், உர வகைகள் பெறுவதற்காக வழங்கிய 4 பில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்டவையாகும்.

துறைமுக அபிவிருத்தி, பால் பொருள் உற்பத்தி, சக்தி வலு மற்றும் துறைகளில் இந்திய கோப்பரேட் துறையினரின் முதலீடுகள் எமது ஈடுபாட்டுக்கு மேலும் ஆதாரமாகும். முதலீடுகள் மேலும் முதலீடுகளை ஊக்குவிக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இலங்கையின் பொருளாதார மீட்சிக்காகவே நட்புறவு அடிப்படையில் தொடர்ந்து முதலீடுகள் செய்யப்படுகின்றன.

**கேள்வி:** இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் அதிகரிப்பதற்கு சீனா ஒரு காரணமா? இந்தியாவினதும், வேறு சில நாடுகளினதும் வேண்டுகோளுக்கு இணங்கவே சீனாவின் ஆய்வுக் கப்பல்களை இலங்கை தடை செய்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அது உண்மையா?

**பதில்:** இந்தியாவும் இலங்கையும் நாகரீகமான இரட்டையர்கள். எமது தொடர்புகள் நட்புறவானதும் ஒருமைப்பாடானதுமாகும். நான் ஒன்று சொல்ல வேண்டும் – இலங்கையுடனான இந்தியாவின் நட்புறவு அதன் சொந்த அடிப்படையிலானதே தவிர மூன்றாவது நாடுகள் சம்பந்தப்பட்டது அல்ல. எமது உறவுகள் குறுகிய மனப்பான்மையானதோ அல்லது வரையறுக்கப்பட்டதோ அல்ல.

இந்தியாவின் உள்நாட்டு ஆற்றல் வளர்ச்சி காரணமாகவே இலங்கையில் அதன் ஈடுபாடு அதிகரித்துள்ளது. சில உதாரணங்கள்: கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா அதன் மீள் சுழற்சி சக்தி வலுவில் 388 சத வீத வளர்ச்சியைக் கண்டுள்ளது. நாங்கள் இன்று சூரிய மற்றும் சக்தி வலுவில் உலகில் நான்காவது இடத்தில் உள்ளோம். நாங்கள் பசுமை வாயுத் திட்டத்தில் உலகின் இரண்டாவது பெரிய சக்தியாக உள்ளோம். அதன் காரணமாகவே எமது நிறுவனங்கள் இலங்கையின் மிகப்பெரிய பயன்படுத்தப்படாத வளங்களை அது பயன்படுத்துவதற்கான வழிவகைகளுக்கு உதவுகின்றன.

**கேள்வி:** இருதரப்பு உறவுகளில் இராணுவ மற்றும் பாதுகாப்பு நிலை என்ன என்பது பற்றிக் கூறுவீர்களா?

**பதில்:** எமது இருதரப்பு உறவு இராணுவ மற்றும் பாதுகாப்பை சேர்ந்த எல்லாத் துறைகளையும் உள்ளடக்கியது. உபகரணங்களை வழங்குதல், இராணுவ மற்றும் பொலிஸ் படையினருக்கு பயிற்சிகளை வழங்குதல், இராணுவ மற்றும் பாதுகாப்பு ஆற்றலை மேம்படுத்துதல் என்பன எமது ஒத்துழைப்பில் உள்ளடங்கும். அதே நேரத்தில் இலங்கையில் இராணுவ – கைத்தொழில் துறையில் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். இலங்கையில் பயிற்சித்துறையில் உள்ள வெளிநாட்டு பாதுகாப்பு பயிற்றுவிப்பாளர்களில் அதிக தொகையினரைக் கொண்டிருப்பது இந்தியாவே. இந்த வருடம் திட்டங்கள் மற்றும் உபகரணத் தேவைகளுக்காக ஒரு கோடி இலங்கை ரூபாவை உதவியாக வழங்கியுள்ளோம். எங்கள் இரு நாட்டு இராணுவங்களுக்கிடையிலும் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். மாலத்தீவுடன் இணைந்து நாம் முத்தரப்பு கடல் பாதுகாப்பு பயிற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம். விமானப்படைப் பயிற்சிகளையும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இலங்கையில் 2017 இல் ஏற்பட்ட வெள்ளம், 2021 இல் ஏற்பட்ட கொவிட் பெருந்தொற்று, 2022இல் ஏற்பட்ட உணவு, எரிபொருள், மருந்து தட்டுப்பாடு என்பனவற்றின் போது இந்தியாவே முதலில் செயலாற்றியது. அயலவர்கள் என்ற வகையில், எமது இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு பல்துறை சார்ந்தது.

**கேள்வி:** இந்தியாவும் இலங்கையும் பிராந்திய விடயங்களிலும், ஏனைய விடயங்களிலும் நெருங்கிச் செயற்பட்டு வருகின்றன. இப்பொழுது இலங்கை 'பிரிக்ஸ்' (BRICS) அமைப்பில் சேர எண்ணியுள்ளது. இலங்கை பிரிக்ஸ்சில் இணைவதற்கு இந்தியா உதவுமா?

**பதில்:** வளர்முக நாடுகளான நாம் பிராந்திய அடிப்படையில் எமது தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுக்காக நிச்சயமாக ஐக்கியப்பட்டு குரல் கொடுக்க வேண்டும் என நாம் உறுதியாக நம்புகின்றோம். அந்த வகையில் இலங்கையை ஒரு பெறுமதியான நண்பனாக இந்தியா கருதுவதுடன், பொது நோக்கத்துக்காக இரு நாடுகளும் இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் கருதுகின்றோம்.

**கேள்வி:** தமிழ் கட்சிகள் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோருகின்றன. இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** இலங்கையின் ஐக்கியம், ஸ்திரத்தன்மை, பிராந்திய ஒருமைப்பாடு என்பனவற்றில் நாம் உறுதியாக உள்ளோம். இலங்கையின் மீள் இணக்க முயற்சிகளை நாம் நீண்ட காலமாக ஆதரித்து வரும் அதே நேரத்தில், இன ஒற்றுமைக்கான அரசியல் பார்வையையும் உள்ளடக்குவதை ஊக்குவிக்க வேண்டும். இது சம்பந்தமாக அரசியல் உயர் மட்டங்களில் பேசப்பட்டுள்ளதுடன், இந்த விடயத்தில் எமது நிலைப்பாடு எப்பொழுதும் நிலையாகவே உள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளான சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் என்பன இலங்கையின் நலன்களுக்கு உகந்தது என நாம் நம்புகின்றோம். இலங்கையின் அரசியலமைப்புக்கு மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தையும், அரசியல் மீள் இணக்கத்தையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கை அரசால் அதை அடைய முடியும்.

**கேள்வி:** உயர் ஸ்தானிகர் அவர்களே, இந்திய – இலங்கை உறவுகள் சம்பந்தமான உங்களுடனான முழுமையான பார்வையை இத்துடன் முடித்துக் கொள்வோமா?

**பதில்:** நான் ஏற்கெனவே கூறியது போல, இந்திய – இலங்கை உறவு என்பது எல்லையில்லாதது. நான் எனது உரையாடல் எல்லாவற்றிலும், எந்தவொரு இடத்திற்கு விஜயம் செய்யும் போதும், மேலும் என்ன செய்யலாம் என்ற எண்ணங்கள் தோன்றும். இரு தரப்பிலும் உள்ள மக்களின் மாபெரும் அபிலாசைகளை இவை எடுத்துக் காட்டுகின்றன.

---

அரசு என்பது ஆளும் வர்க்கத்தின் மிகச் செறிவான, ஒருமுனைப்படுத்தப்பட்ட வெளிப்பாடு ஆகும். ஆளும் வர்க்கம் தன் பொது நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட தனிச்சிறப்பான அமைப்பே அரசு. அது நடுநிலையானது அல்ல. ஏனெனில் அது நடுநிலையானதாக இருக்க முடியாது. தெளிவாக வரையறுத்துச் சொல்வதென்றால் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்கான அமைப்பே அரசு.

**– லெனின்**

# பனியுகம்

**நாம்** வாழ்ந்துகொண்டிருக்கும் மானுட யுகம், குறைந்தபட்சம் ஐந்து பனியுகங்களைக் கடந்து வந்துள்ளது. கடந்த பத்து இலட்சம் ஆண்டுகளில் மட்டும் 12 முறை பனிப்பாறைப் பரவல் (glaciation) நிகழ்ந்திருக்கிறது.

காலநிலை அறிஞர்கள் உறைபனிக் கால வெப்பநிலைகளைக் குறித்த தீவிர ஆய்வுகளில் இறங்கியுள்ளனர். கரிம வளி ($CO_2$) உமிழ்வுக்கும் வெப்பநிலைக்கும் இடையிலுள்ள தொடர்பு, வெப்பநிலை உயர்வு பூமியை எவ்வாறு பாதிக்கும், எதிர்காலத்தில் பூமியின் வெப்பநிலைப் போக்கு எவ்வாறு இருக்கும் என்பதையெல்லாம் சரியாகப் புரிந்துகொள்ள இந்த ஆய்வுகள் பெருமளவு உதவும்.

புவிக்கோளத்தின் சுற்றுவட்டப் பாதையில் நேர்ந்த மாற்றங்களும், அவ்வப்போது ஏற்படும் கண்டத்தட்டுகளின் விலகல்களும் பனியுகங்களின் காலநீட்சியைத் தீர்மானித்திருக்கின்றன. சில நூறு கோடி ஆண்டுகள் வரை நீடித்து நின்ற பனியுகங்கள் (Ice Ages) குறித்து நமக்குக் கிடைத்திருக்கும் அடிப்படைப் புரிதல் சார்ந்து இரண்டு அறிவியல் மேதைகளுக்கு நன்றி சொல்ல வேண்டும்: ஒருவர் நிலவியல் அறிஞர் லூயி அகாசி (Louis Agassiz); மற்றவர் கணிதவியல் அறிஞர் மிலூத்தின் மிலன்கொவிச் (Milutin Milankovitch).

**பனியுக நிலம்**

பனிப்பாறைகளின் பரவலானது, பூமியின் பெருநிலக் கட்டமைவுகளை மாற்றியமைத்தன. பனியுகங்களின் வெவ்வேறு கட்டங்களில் பாறைகள் முளைத்து எழுந்தன. மணல்பரப்புகள் உருவாகின. நிலஅடுக்குகள் மீதான பனிப்பாளங்களின் அழுத்தத்தால் மலைகள் தாழ்ந்து இறங்கின. வட துருவப் பனிச் சிகரங்களின் வெப்பநிலை வீழ்ச்சியினால் குளிர்ப்பிரதேசத் தாவரங்கள் தென்மண்டலம் நோக்கிப் பரவலாயின.

நீர் பனிப்பாறைகளாக மாறிக்கொண்டிருந்ததன் விளைவாக, கடல் மட்டம் அதிரடியாக இறங்கியது. ஆறுகள் தாழ்வான பள்ளாத்தாக்குகளை ஏற்படுத்தி ஓடத் தொடங்கி, நிலத்தில் ஏரிகளை உருவாக்கின.



கடல் மட்டம் கணிசமாகத் தாழ்ந்துபோன நிலையில், ஏற்கெனவே மூழ்கிப்போயிருந்த, கண்டங்களை இணைக்கும் நிலப் பகுதிகள் மீண்டும் வெளிப்பட ஆரம்பித்தன. நிலத்தை மூடிப் போர்த்தியிருந்த பனிப்பாளங்கள் பிறகு ஒரு கட்டத்தில் உருகிப் பின்வாங்கத் தொடங்கின. அதன் விளைவாகப் பள்ளங்கள் நிலத்தின் படிவுகளோடு சேர்ந்து, புதிய நன்னீர் நிலைகளாக வடிவம் கொண்டன.

***ஹரீதையா கொன்ஸ்தந்தின்***

தொல்லியல் நிகழ்வுகளின் காலநீட்சியைக் கற்பனை செய்து பார்ப்பது சற்றே கடினமானது. நாம் பெரும்பொழுது, சிறு பொழுது, ஆண்டு, பதிற்றாண்டு, நூற்றாண்டு என்று எண்ணிப் பழகியவர்கள். ஒரு நாளின் 24 மணி நேரத்தை ஆறு பொழுதுகளாகவும், ஆண்டின் காலத்தை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பதான ஆறு பெரும் பொழுதுகளாகவும் பகுத்துக் குறிக்கிறது தொல்காப்பியம்.

கோயம்புத்தூர் போன்ற ஒரு பெருநகரத்தின் வெப்பநிலை நாளின் ஆறு பொழுதுகளில் 23 – 38 பாகைக்கு (டிகிரி செல்சியஸ்) இடையில் மாறலாம். பெரும்பொழுது என்றால் வெயில், மழை, பனிப்பொழிவை ஒட்டி ஆண்டின் அதிகபட்ச வெப்பநிலை சற்றொப்ப 20 பாகை மாறும். தொல்லியல் காலங்கள் அப்படியல்ல. அவை பல்லாயிரம், இலட்சம், கோடி ஆண்டுகளின் கணக்கு. உறைபனிக் காலம் −80 பாகை வரை இறங்கலாம் எரிமலைப் பிழம்புகள் 1,000 பாகை (டிகிரி செல்சியஸ்) வெப்பத்தை உமிழலாம்.

**8.0 பாகை**

பனியுகத்தில் வட, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா உள்ளிட்ட பூமியின் பெரும்பான்மைப் பரப்புகள் பனிப்பாளங்களால் மூடப்பட்டிருந்தன. கடைசிப் பனியுகம் உச்சத்தில் இருந்தபோது, பனிப்பாளங்கள் 12,000 அடி வரை உயர்ந்து கனடா, ஸ்கண்டிநேவியா (Scandinavia), ரஷ்யா, தென்னமெரிக்கா வரை பரவியிருந்தன.

போலவே, கடல் மட்டம் 400 அடி தாழ்ந்திருக்கிறது. அப்போது பூமியின் சராசரி வெப்பநிலை சற்றொப்ப 8.0 பாகை செல்சியஸ் இப்போதைய சராசரி வெப்பநிலையைவிட 8.0 பாகை குறைவு. துருவப் பகுதிகளில் வெப்பநிலை இதைவிட 14 பாகை குறைவாக இருந்தது. அத்தகைய வெப்பநிலையைத் தாங்கும் தகவமைப்பு கொண்ட உயிரினங்கள் மட்டுமே எஞ்சி நின்றன.

பனியுகத்தில் புவியில் ஆதிக்கம் செலுத்திய பேருயிர், கம்பளி மம்முத் யானை (wooly mammoth) என்னும் பனியுக யானைகள். ரோமத்தால் பொதியப்பெற்ற உடலும், மிக நீளமான தந்தங்களும் கொண்ட, யானையைவிட பிரம்மாண்டமான அப்பேருயிரின் மறைவுக்குப் பிறகு, புவியில் ஆதிக்கம் செலுத்தவந்த இனம், மனித இனம்.

**கண்டப் பாலம்**

அது சரி, மனித இனம் எப்படிப் பனியுகத்தை எதிர்கொண்டது? கடுங்குளிருக்குத் தாக்குப்பிடிக்க இசைவான ஆடைகளை உருவாக்க

எலும்பாலான ஊசிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் இறுதிப் பனியுகத்தின் முடிவில் கடல் மட்டம் தாழத் தொடங்கியபோது, கண்டங்களுக்கு இடையில் தோன்றிய நில இணைப்புகளின் வழியாக புதிய நிலப் பகுதிகளைத் தேடிக் கண்டடைந்தார்கள். பனியுகம் நிறைவுற்று, வெதுவெதுப்பான 'ஹோலோசீன்' (Holocene) காலம் தொடங்கியபோது மனித இனத்துக்குச் சாதகமாக நிலத்தைப் பனியுகம் மாற்றியிருந்தது. அவர்கள் வேளாண்மை பழகினார்கள், விலங்குகளை வீட்டுக்குப் பழக்கிப் பயன்படுத்தினார்கள்.

அதே வேளையில், இராட்சத உயிர்களான பனியுக யானைகள், பெரும்பூனையின ஊனுண்ணிகள் (sabre tooththed cats), தரைத் தேவாங்கு இன உயிரினம் (ground sloth) உள்ளிட்ட அனைத்தும் அழிந்து போயிருந்தன. அந்த அழிவுக்குக் காரணம் கொள்ளை நோயா, மனிதனின் வேட்டைப் பழக்கமா, இல்லை காலநிலை மாற்றமா? இதுவரை முடிச்சவிழாத பனியுகப் புதிர்களில் ஒன்று, இந்தக் கேள்வி.

**மானுட யுகம்**

இயற்கையின் வழிமுறைகள் புதிரானவை. மாற்றங்களைப் புகுத்துவதற்கு, தொல்லியல் பேரிடர்களையே இயற்கை ஆயுதங்களாகக் கையாண்டு வந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட உயிரினத்துக்குச் சாதகமான சூழலை இயற்கையே அமைத்துத் தருவது பல யுகங்களுக்கு ஒரு முறை நிகழ்வது. மானுட யுகம் (ஹோலோசீன்) அப்படி வாய்த்த ஒன்றுதான். அந்த அற்புதமான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட மனித இனம், இயற்கைக்கு எதைத் திருப்பிக் கொடுத்தது என்பது கோடி ரூபாய் கேள்வி!

***3.0 பாகை!***

கடைசி உறைபனி யுகம் முடிவுற்ற பின்னான 21,000 ஆண்டுகளில் புவியின் வெப்பநிலை 3.0 பாகை செல்சியஸ் உயர்ந்திருக்கிறது. அதில் ஒரு பாகை, கடந்த சில நூறு ஆண்டுகளில் நேர்ந்திருக்கிறது. அது தொழில் புரட்சிக்குப் பிந்தைய காலம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

1.5 பாகை வெப்பநிலை உயர்வு 2060 இற்குள் நிகழும் என 2016 பாரிஸ் காலநிலை மாநாடு கணித்திருந்த நிலையில், இவ்வாண்டு (2024) மே மாதத்திலேயே அது நிகழ்ந்துவிடும் என அண்மை ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. அந்த எல்லையைத் தொடுவதற்கு இன்னும் 0.2 பாகைதான் குறைவாக இருக்கிறது!

**எகிறும் அல்பீடோ**

இவ்வளவு காலமாகச் சீராக, மிதமாக நிகழ்ந்துவந்த கடல் மட்ட உயர்வானது, கடந்த 200 ஆண்டுகளில் விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றது. உபயம் – மனிதச் செயல்பாடுகள்.

வளி மண்டலத்தில் 'கரிம – நிகர் - வளி' ($CO_2$) உமிழ்வு அதிகரிப்பின் காரணமாக, பூமி உள்வாங்கும் வெப்பத்துக்கும் திருப்பியனுப்பும் வெப்பத்துக்குமான 'அல்பீடோ' (Albeido) இடைவெளி வேகமாகக் கூடிக்கொண்டே போகிறது. மனித இனம் தொடங்கிவைத்த இந்த ஆட்டத்தை முடித்து வைக்கப்போவது 'கரிம – நிகர் - வளி'!. சூழலியல் கட்டமைவுகளையும் பல்லுயிரியத்தையும் அழிப்பதில் தீவிரம் காட்டிய மனித இனம், இப்போது நிற்பது அழிவின் விளிம்பில்!.

# சுவிஸ் அமைதி மாநாடு ஒரு 'மோசடி' : ரஷ்யா விமர்சனம்

**ஜூ**ன் 15–16 ஆம் திகதிகளில் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற உக்ரைன் அமைதி உச்சி மாநாட்டை ஒரு 'மோசடி' என ரஷ்யா கடுமையாக விமர்சித்துள்ளது. ஐ.நா.வுக்கான ரஷ்யாவின் நிரந்தரப் பிரதிநிதி வசிலி நெபென்சியா (Vasily Nebenzya), சுவிஸ் அமைதி மாநாடு குறித்து செய்தியாளர் சந்திப்பின் போது, இந்த அமைதி உச்சிமாநாடு ஒரு "மோசடி முயற்சி" என்று கடுமையாக விமர்சித்துள்ளார். சுமார் 90 நாடுகள் பங்கேற்கும் இந்த உச்சி மாநாட்டில் ரஷ்யாவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இந்நிலையில் இந்த அமைதி மாநாடு எப்படி பலன் கொடுக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

உச்சிமாநாட்டில் எந்த அமைதி ஒப்பந்தமும் கையெழுத்திடப்படாது என்றும், அதற்குப் பதிலாக, "மனிதாபிமான பிரச்சனைகள், அணுசக்தி பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு பற்றி விவாதிக்கப்படும்" என்று சுவிஸ் ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான வியோலா அம்ஹெர்ட் (Viola Amherd) தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இம்மாநாட்டில் தெற்குலக நாடுகள் பங்கேற்றாலும், உக்ரைனுக்கு தொடர்ந்து நிதிகளையும் ஆயுதங்களையும் கொடுத்து போரை ஊக்குவித்து வரும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கமே இருந்தது என கூறப்படுகிறது. மேலும் இம்மாநாட்டில் ரஷ்யா புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலையில், அழைப்பு விடுத்திருந்தாலும், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பாரபட்சமான நிலைபாடுகளின் காரணமாக அந்த அழைப்பை நாங்களே புறக்கணித்து இருப்போம் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

**சீனா கருத்து**

இம்மாநாட்டிக்கு ரஷ்யாவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அமைதி உடன்படிக்கை ஏற்படவேண்டும் என்றால் இருதரப்பும் இருக்க வேண்டும். இதனால் இந்த மாநாட்டில் பங்கேற்காது என அழைப்பை புறக்கணித்ததாக சீனா தெரிவித்துள்ளது. ரஷ்யா, உக்ரைன் ஆகிய இரு நாடுகளின் முறையான பங்கேற்பு, அனைத்து தரப்பு நாடுகளின் சம பங்கேற்பு மற்றும் அனைத்து அமைதித் திட்டங்களைப் பற்றிய நியாயமான விவாதம் ஆகிய மூன்றும் மாநாட்டிற்கு அவசியமானது என நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சமமான பங்கேற்பு இல்லை என்றால் அமைதி மாநாடு அமைதியை உறுதிப்படுத்த முடியாது என சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் (Mao Ning) தெரிவித்துள்ளார்.

மேற்கு நாடுகள், குறிப்பாக ஜி–7 நாடுகள் (அமெரிக்கா, பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம்) போரை நிறுத்த விடாமல் தொடர்ந்து உக்ரைனுக்கு ஆயுதங்களையும் நிதிகளையும் வழங்கி வருகின்றன. இந்த ஆண்டு நடைபெற்ற ஜி–7 நாடுகளின் உச்சி மாநாட்டிலும் 5000 கோடி டொலர்கள் கடன் கொடுக்க உறுதியளித்துள்ளன. இதற்காக மேற்கு நாடுகளால் முடக்கி வைக்கப்பட்டுள்ள ரஷ்யாவின் 3,00,000 கோடி டொலர் சொத்துக்களை அராஜகமான முறையில் பயன்படுத்த ஜி–7 நாடுகள் முடிவெடுத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘சில புலம்பெயர் தமிழர்கள் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர்!’

## -வேலுப்பிள்ளை மனோகரன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் அவருடைய குடும்பத்தினரும் உயிருடன் இருப்பதாகச் சொல்லி புலம்பெயர் தமிழர்களில் ஒரு பகுதியினர் மோசடிச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக பிரபாகரனின் மூத்த சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன் தெரிவித்திருக்கிறார்.

“எனது சகோதரர் பிரபாகரனும் அவரது முழுக் குடும்ப உறுப்பினர்களும் தியாகிகளாக மரணமடைந்துவிட்டனர். இதை ஏற்றுக்கொள்வது சற்று கஸ்டமான விடயம்தான். என்னுடைய சகோதரரின் குடும்பம் சம்பந்தமாக இந்த மோசடிக்காரர்களின் பிரச்சாரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன். அவர்கள் தமது சொந்த நலனுக்காக உங்கள் உணர்வுகளையும், எனது சகோதரரின் பெருமையையும் பயன்படுத்த முனைகின்றனர்” என மோசடிக்காரர்களின் திட்டங்கள் குறித்து மனோகரன் எச்சரிக்கிறார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் Jaffna Mirror சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் அப்பாவி தமிழர்களிடமிருந்து பணம் பெறுவதற்காக பிரபாகரனும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சிலரும் உயிருடன் இருப்பதாக இந்த மோசடிக்காரர்கள் கூறி வருகின்றனர் என மனோகரன் தெரிவித்துள்ளார்.

“நான் பிரபாகரனின் மூத்த சகோதரர் என்ற வகையில் இந்த அபத்தத்துக்கு முடிவு கட்டுவது எனது கடமை” என இலங்கையில் உள்நாட்டுப் போர் ஆரம்பிப்பதற்கு முன்னரே 1975இல் நாட்டை விட்டு வெளியேறி தற்போது டென்மார்க்கில் வாழும் மனோகரன் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் மேற்கில் வாழும் ஒரு இளம் பெண் தன்னை பிரபாகரனின் மகள் துவாரகா எனப் போலியாகச் சொல்லி புலம்பெயர் தமிழர்களிடம் மில்லியன் கணக்கில் பணத்தைச் சுருட்டியுள்ளார் எனவும் மனோகரன் குறிப்பிடுகிறார். மேலும் அவர்,

“பிரபாகரனின் மூத்த சகோதரன் என்ற வகையில் பிரபாகரனுக்கும் அவரது



குடும்பத்துக்கும் என்ன நடந்தது என்ற உண்மையைத் தெரிவிக்கும் கடமை எனக்கு இருக்கிறது. நாங்கள் உண்மையைப் பேசாது விட்டால் இந்தப் போலித்தனமான சுயநலமிகளின் பிரச்சாரம் மேலோங்கி மக்கள் அதை நம்பத் தொடங்கி விடுவார்கள்” எனவும் தெரிவித்துள்ளார்.

2008 வரை தான் அடிக்கடி பிரபாகரனுடன் தொலைபேசியில் உரையாடி வந்ததாகத் தெரிவித்துள்ள மனோகரன், இறுதியாக 2009 மே மாதத்தில் பிரபாகரன் கொல்லப்படுவதற்கு இரண்டு மாதங்கள் முன்னதாக உரையாடியதாகவும் மனோகரன் அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார். அப்பொழுது பிரபாகரன்,

“நிலைமை கையை மீறிவிட்டது என்று சொன்ன பிரபாகரன், அதன் பின்னர் தன்னுடன் உள்ள பெற்றோரைப் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்” எனவும் மனோகரன் கூறியுள்ளார்.

பிரபாகரன் எப்போதாவது புலிகளின் போர் முடிவுக்கு வந்துவிட்டது என்பதை ஏற்றுக் கொண்டாரா என்ற கேள்விக்குப் பதிலளித்த மனோகரன், “இல்லை, அவ்வாறு சொல்லவில்லை. பிரச்சினைகள் தலைக்கு மேலே போய்விட்டது என்பதை ஏற்றுக்கொண்ட பிரபாகரன், தாம் போராட்டத்தைத் தொடர்வோம் என்றுதான் கூறினார்” எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்கில் வாழும் சில தமிழர்களும், நன்கு பிரபல்யமான இரண்டு புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் பணம் பெறுவதற்காக பிரபாகரனின் குடும்பம் பற்றி எண்ணற்ற பொய்களைக் கூறி வந்ததாக மனோகரன் குற்றம் சாட்டுகிறார்.

“இந்த நபர்களும் அமைப்புகளும் தமது ஏமாற்று வேலைகளை அரங்கேற்றுவதற்காக ஒரு வலைப்பின்னலை உருவாக்கி வைத்திருந்தனர். அவர்கள் புலம்பெயர் தமிழர்களின் உணர்வுகளைப் பயன்படுத்தி அவர்களிடமிருந்து பணம் பெறுவதற்காக பிரபாகரனின் மகள் துவாரகா உயிரோடு இருப்பதாக போலியாகச் சொல்லி வந்தனர். இதன் மூலம் பிரபாகரனின் குடும்பத்துக்கும், தமிழர்களின் இலட்சியத்துக்கும் உதவுவதாக மக்களை நம்ப வைத்து அவர்களிடமிருந்து பெரும்தொகை பணத்தை வசூலித்து வந்தனர். இது சுலபமாகத் திரட்டிய பணம். துவாரகா உயிருடன் இருப்பதாகச் சொன்னதன் மூலம், கடினமான வேலைகள் செய்தோ அல்லது வேறு வழிகளில் உழைத்தோ பெற முடியாத பெரும் தொகையான மில்லியன் கணக்கான டொலர்களை அவர்கள் திரட்டிக் கொண்டனர்” என மனோகரன் சொல்கின்றார்.

இந்த மோசடிப் பேர்வழிகளில் சிறீதரன் என்ற ஒருவர் பற்றிக் குறிப்பிடும் மனோகரன், 2004இல் இலங்கையில் இருந்து வந்தவர் என்று சொல்லி, அவருக்கு உதவி தேவை என ஒருவரை அவர் அழைத்து வந்ததாக குறிப்பிடும் மனோகரன்,

“அவருக்கு நான் 25,000 குரோனர் (Kronor) பணம் கொடுத்தேன். பின்னர் தெரிய வந்தது அவர் தமிழ் ஈழத்தில் இருந்து வரவில்லை, இத்தாலியில் இருந்து வந்தவரென்று. நான் இதுபற்றி எனது தம்பி பிரபாகரனுக்கும் தெரியப்படுத்தினேன்” என்கிறார்.

போர் முடிவுக்கு வந்து, தமது பெற்றோர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற பின்னர் அவர்களுடனான தொடர்புகளை தான் இழந்து விட்டதாக மனோகரன் கூறுகின்றார்.

“நாங்கள் சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அது சம்பந்தமான உதவிக்காக அணுகினோம். ஆனால் அவர்கள் எமக்கு உதவ முன்வரவில்லை. சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது பெற்றோருடன்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...

# இந்திய தேர்தல்: மோடியின் வித்தை எடுபடவில்லை!




இந்திய பாராளுமன்றத் தேர்தல் (2024) முடிவு ஒரு 'நிச்சயமற்ற நிலை'க்கு இட்டுச் சென்றுள்ளது. 543 உறுப்பினர் கொண்ட பாராளுமன்றத்தில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி 293 ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளதை பிரதமர் நரேந்திர மோடி பிரகடனப்படுத்திய போதும், நிச்சயமாக அவர் கவலையுள்ள மனிதராகவே இருக்கிறார். பாரதிய ஜனதா கட்சி தனித்து ஆட்சியமைப்பதற்கு 32 ஆசனங்கள் பற்றாமல் போய்விட்டது. அது 63 ஆசனங்களையும், 20 சதவீதம் பாராளுமன்ற பலத்தையும் இழந்துள்ளது. முன்னைய பாராளுமன்றத்தில் 303 ஆசனங்களைக் கொண்டிருந்த அதன் பலம் தற்பொழுது 240 ஆசனங்களாகக் குறைந்துள்ளது.

இந்தியாவில் மூன்றாவது முறையாகவும் பிரதமரான இரண்டாவது நபராக மோடி இருக்கிறார். முன்பு ஜவகர்லால் நேரு அப்படி இருந்தார். ஆனால், நேரு 1962 இல் பாராளுமன்றத்தில் ஏகப்பெரும்பான்மையைக் கொண்டிருந்தார். மோடியோ அதிகாரத்தை தக்க வைப்பதற்கு சிறிய கட்சிகளில் தங்கி நிற்க வேண்டியிருந்தது. மோடியின் சொந்த தொகுதியான வரணாசியிலேயே (Varanasi) அவரது வெற்றி பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது. 2019 இல் 480,00 ஆக இருந்த வெற்றி வாக்குகள் இப்பொழுது 152,00 ஆகக் குறைவடைந்துள்ளது. அதே நேரத்தில் ராகுல் காந்தி ரேபரேலி (Raebareli) தொகுதியில் 390,000 வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த பாராளுமன்றத்தில் 303 ஆசனங்களுடன் மேல்நிலையில் இருந்த மோடி, இப்பொழுது நிதிஸ்குமார் தலைமையிலான ஜனதா தளம்–யு (JD-U) மற்றும் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சி (TDP) ஆகியவற்றின் உதவியுடன் அரசாங்கம் அமைக்க வேண்டிய நிலையில் உள்ளார். அவர் நிலையற்ற ஆட்களுடனான ஒரு கூட்டணிக்கு தலைமை தாங்க வேண்டிய நிலையில் உள்ளார். நிதிஸ்குமாரும் சந்திரபாபு நாயுடுவும் மோடியை கடுமையாக விமர்சித்தவர்கள். நிதிஸ்குமார் மோடியுடன் கூட்டுச் சேர்வதற்கு முன்னர் எதிர்க்கட்சிகளின் கூட்டணியான 'இந்தியா' அணியை (I.N.D.I.A Bloc) உருவாக்க உதவி புரிந்தவர். சந்திரபாபு நாயுடுவும் தேர்தலுக்கு முன்னர் பாரதிய ஜனதா கட்சியுடன் உறவற்று இருந்தவர்.

நிதிஸ்குமாரும், சந்திரபாபு நாயுடுவும் மிகுந்த பேராசை மிக்கவர்களாகவும், நிச்சயமற்றவர்களாகவும் இருப்பதால், தேசிய ஜனநாயக கூட்டணி தொடர்ந்து, மோடி தனது அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்குமா என்பதை விரைவில் பார்க்கலாம். அவர்கள் தமது ஆதரவுக்குப் பிரதிபலனாக பலம் வாய்ந்த அமைச்சுப் பதவிகளைக் கோரக்கூடும். தெலுங்கு தேசம் கட்சி போக்குவரத்து மற்றும் சுகாதார அமைச்சுகளில் கண் வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது. நாயின் வாலை நிமிர்த்த முடியாது என்று பொதுவாகச் சொல்வது போல, கூட்டணி அரசியல் விளையாட்டில் இது சகஜம். இந்த இரண்டு அரசியல் தலைவர்கள் மட்டும் மோடிக்கு பிரச்சினை என்றில்லை. அடுத்த ஐந்து ஆண்டு காலமும் பிரதமர் மோடிக்கு முடிவற்ற காலமாக இருக்கப் போகிறது.

ராமர் கோயில் அமைக்கப்பட்டுள்ள உத்தரப் பிரதேசத்தின் பைஸாபாத் (Uttar Pradesh's Faizabad) தொகுதியில் பாரதிய ஜனதா கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி பெரும் அதிர்ச்சியானதாகும். ராமர் கோயில் அமைக்கப்பட்டதும், அதை மையமாக வைத்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டதும், லோக்சபா தேர்தலில் சுலபமாக வெற்றியீட்ட உதவும் என மோடி எண்ணியிருந்தார். ஆனால், பாரதிய ஜனதா கட்சி அந்தத் தொகுதியை சமாஜ்வாதி (Samajwadi) கட்சியிடம் இழந்தது! ராமர் கோயில் அமைத்து வித்தை காட்டியதன் காரணமாக பெரும் ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த மோடிக்கு இது பெரும் ஏமாற்றமாக இருந்திருக்கும். குறிப்பான இந்தத் தோல்வி பாரதிய ஜனதா கட்சியின் இனவாத – மதவாத நிகழ்ச்சி நிரலுக்குக் கிடைத்த பெரும் பின்னடைவாகும்.

மோடி பெரும் பிரயத்தனம் எடுத்து மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரம் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. பாரதிய ஜனதா கட்சியின் தோல்விக்கு பல விடயங்கள் காரணமாக இருந்தபோதிலும், அவற்றில் எதிர்க்கட்சிகள் மீதான அடக்குமுறை, அதிகார துஸ்பிரயோகம், அதிகரித்த வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு என்பன குறிப்பிடத்தக்கவை. அத்துடன் பாரதிய ஜனதா கட்சியால் இளைஞர்களைக் கவரவும் முடியவில்லை.

இதற்குப் பிறகு மோடி, 223 ஆசனங்கள் பெற்ற காங்கிரஸ் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியை தன் பின்பக்க

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# ரஷ்யா-வியட்நாம் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் வடகொரியா பயணத்தை தொடர்ந்து, இரண்டு நாள் அரசு முறை பயணமாக வியட்நாம் சென்ற போது, இருநாடுகளுக்கும் இடையிலான தேசிய பாதுகாப்பு, அணு ஆற்றல், எரிசக்தி உற்பத்தி உள்ளிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. உலகளாவிய போர்ப்பதற்றங்களுக்கு இடையே ரஷ்ய ஜனாதிபதி, வடகொரியா மற்றும் வியட்நாமிற்கு மேற்கொண்ட இந்த பயணங்கள் நேட்டோ படையின் அச்சுறுத்தலுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் உள்ளதாக கருதப்படுகின்றது.



இந்த ஒப்பந்தங்கள் வாயிலாக வியட்நாம் கம்யூனிஸ்ட் அரசின் 'மூங்கில் இராஜதந்திரத்தை' (Bamboo Diplomacy) ரஷ்யா திறமையாகப் பயன்படுத்துவதை எடுத்துக் காட்டுகிறது என கூறப்படுகிறது. 'மூங்கில் இராஜதந்திரம்' மூலம் வியட்நாம் சர்வதேச உறவுகளில் நெகிழ்வுத் தன்மை மற்றும் அரசியலை உறுதியாகக் கடைப்பிடித்து வரும் அதே வேளையில், எந்த அணிக்கும் வளைந்து கொடுக்காமல் தனது சொந்த தேசிய நலன்களை வலியுறுத்தி வருகிற சர்வதேச கொள்கையை கடைப்பிடித்து வருகின்றது வியட்நாம் அரசு. இந்த நிலைப்பாடு 'மூங்கில் இராஜதந்திரம்' என அழைக்கப்படுகின்றது.

உக்ரைன் – ரஷ்யா போரில் எந்த நாட்டின் பக்கமும் சாராமல் நடுநிலை நிலைப்பாட்டை பேணுகின்றது வியட்நாம் அரசு. அதே போல ஜூன் 15–16 இல் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற உக்ரைன் அமைதி உச்சி மாநாட்டில் பங்கேற்க வியட்நாம் மறுத்தது. இது அந்நாட்டின் உறுதியான மூங்கில் இராஜதந்திரத்தை வெளிப்படுத்தியுள்ளது.

வியட்நாம் செல்வதற்கு முன் புட்டின் அந்நாட்டின் பத்திரிகையொன்றுக்கு எழுதிய கட்டுரையிலும் அந்நாட்டின் மூங்கில் இராஜதந்திரத்தை குறித்து பாராட்டியுள்ளார். மேலும் ரஷ்யாவின் நம்பிக்கையான கூட்டாளிகளில் வியட்நாமும் ஒரு நாடாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**பாதுகாப்பு ஒப்பந்தம்**

ரஷ்யாவும் வியட்நாமும் சர்வதேசச் சட்டத்தின் வரம்புகளுக்குள் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் "தங்கள் நாட்டின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் மூன்றாம் நாடுகளுடன் கூட்டணி மற்றும் ஒப்பந்தங்களில் நுழைய வேண்டாம்" என வியட்நாம் ஜனாதிபதி டூ லாம் (Tô Lâm) அழைப்பு விடுத்துள்ளார். இந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு மூன்றாம் நாடுகளுக்கு எதிரானதல்ல எனவும் கூறப்பட்டுள்ளது.

அணு ஆற்றல் வியட்நாமில் அணு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்தை 2027 இற்குள் கட்டுவதற்கான ஒப்பந்தம் ரஷ்யாவிற்கும் வியட்நாமிற்குமிடையே கையெழுத்தாகியுள்ளது. எரிசக்தி உற்பத்தி ரஷ்ய எரிவாயு நிறுவனமான 'நோவாடெக்' (Novatek), 'பெட்ரோவியட்நாம்' (Petrovietnam) நிறுவனத்துடன் இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் ஆண்டுகளில் வியட்நாம் திரவ இயற்கை எரிவாயு (Liquefied Natural Gas - LNG)) திட்டங்களைத் தொடங்க உள்ளது. மேலும் பெட்ரோவியட்நாம் மற்றொரு ரஷ்ய நிறுவனத்துடன் இணைந்து புதிய பசுமை எரி பொருட்கள் தயாரிப்பில் முதலீடு செய்யவும் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

உள்ள வசதியான குடும்பங்களைச் சேர்ந்தோர். இந்த மாணவர்கள் நாளை தமது பெற்றோர்கள் போல வசதியானவர்களாக வர வேண்டியவர்கள். ஆனால் அவர்களின் தற்போதைய போக்கு. அமெரிக்க சமூகத்தில் ஒரு புரிந்துணர்வை மேற்கொள்ள முடியாத அவல நிலையையும், அவர்கள் சமூகத்தை விட்டு வெளியேறியுள்ளதையும் பிரதிபலிப்பதாக நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அமெரிக்க மாணவர்களின் அமைதி வழியிலான போராட்டங்களை அரசாங்கம் ஒடுக்குவதானது, அமெரிக்க அரசியல் சாசனத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள பேச்சுரிமை, கருத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை, ஊர்வலம் போகும் உரிமை என்பனவற்றைக் கேலிக்கூத்தாக்கியுள்ளது.

இது மட்டுமல்லாமல், அமெரிக்கா மற்றைய நாடுகளில் "பயங்கரவாத – எதிர்ப்பு" என்ற பெயரில் மேற்கொள்ளும் தனது மேலாதிக்கத்துக்கான இராணுவ நடவடிக்கைகளால் இதுவரை 4.7 மில்லியன் மக்கள் வரை இறந்துள்ளனர்.

அமெரிக்காவின் மனித உரிமை நிலபரங்கள் பற்றிய இந்தத் தகவல்கள் இரகசியமானவை அல்ல, அவற்றில் பெரும்பாலானவை அமெரிக்க ஊடகங்களாலேயே வெளியிடப்பட்டவை என சீனாவின் அறிக்கை கூறுகிறது.

---


நாத்திகம் என்பது பொதுவுடைமையின் இயல்பான மற்றும் பிரிக்க முடியாத பகுதியாகும்.

**–லெனின்**

# அக்யுபங்சர் (Acupuncture) மூலம் குணப்படுத்தும் அற்புதக் கலை!

மூட்டு வீக்கம் (Arthritis) முதியவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கின்ற ஒரு பொதுவான நோய். இது அவர்களை லேசான நாளாந்த வேலைகளைக் கூட செய்ய விடாமல் செய்துவிடும். பெரும்பாலான நோயாளிகள் அதன் வேதனையிலிருந்து தற்காலிகமாகத் தப்புவதற்காக வலி நிவாரணி மாத்திரைகளை (Pain Killer) உட்கொள்வதுடன், களிம்புகளையும் (Palm) பயன்படுத்துவார்கள்.

வைத்தியத்துறையில் அக்யுபங்சர் மிகவும் வெற்றிகரமான முறையிலும், செலவு குறைந்ததாகவும், வேதனை குறைந்த மருத்துவ முறையாகவும் பல வருடங்களாக இருந்து வருகிறது. இதன் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளின் காரணமாக இந்த சிகிச்சை முறை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த புராதன சிகிச்சை முறை நவீனகால வைத்தியர்களால் மூட்டு வலிக்குப் பயன்படுத்தப்பட்டு மகத்தான வெற்றியைக் கொடுத்துள்ளது. ஊசிகள் மூலம் செய்யப்படும் சிகிச்சையால் நோயாளி வலியிலிருந்து பெரும் நிவாரணத்தை உணர்வார். அத்துடன், தொடர் சிகிச்சைகளால் வலி படிப்படியாகக் குணமடையும். அக்யுபங்சர் சிகிச்சையை உடலில் வலி தோன்றும் இடங்களில் பயன்படுத்தும் போது, அது பொதுவாகப் பயன்படுத்தும் பிற மாத்திரைகளை விட சிறப்பாகவும்




விரைவாகவும் செயலாற்றுகிறது.

பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த அக்யுபங்சர் சிகிச்சை முறையை வைத்தியர்கள் காலத்திற்கு ஏற்ப வளர்த்தும் மெருகூட்டியும் உள்ளனர். எமது ஆரம்பகால தகவல்களின்படி, அக்யுபங்சர் புராதன சீனாவில் 3,000 ஆண்டுகளுக்கு முன்னரே பயன்பாட்டில் இருந்துள்ளது. மஞ்சள் சக்கரவர்த்தி (Huang Di Neijing) யின் பழமை வாய்ந்த உள் வைத்திய குறிப்புகளில் தெரிவித்த பல்வேறு நோய்களுக்கான அக்யுபங்சர் புள்ளிகள், நுட்பங்கள், வழிமுறைகள் என்பன பல வருடங்களாக நவீன வைத்தியர்களால் மொழிபெயர்க்கப்பட்டு, படிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டுள்ளன.

அக்யுபங்சர் நவீன விஞ்ஞானத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதா? ஓம் என்பதே சுருக்கமான பதில். கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, யப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல வைத்தியர்களும் ஆராய்ச்சியாளர்களும் பல விதமான ஆராய்ச்சிகளைச் செய்து 500,000 இற்கு மேற்பட்ட கட்டுரைகளில் தமது ஆய்வுகளின் விபரங்களை ஆவணப்படுத்தியுள்ளார்கள். எங்களது காலம் சென்ற (இலங்கை) பேராசிரியர் டாக்டர் அன்ரன் ஜெயசூரியா கூட, அக்யுபங்சரை நவீன மருத்துவ முறையுடன் ஒன்றிணைப்பதில் முன்னணியில் திகழ்ந்துள்ளார். இது, புராதன வைத்திய சேவையாளர்கள் மனித உடலையும் அதன் செயல்பாட்டையும் நன்கு விளங்கிக் கொண்டிருந்ததை எடுத்துக் காட்டுகிறது.


அக்யுபங்சர் நவீன வைத்தியர்களுக்கு அவர்களது தினசரி செயல்பாட்டில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. விரைவில் இலங்கையிலுள்ள மக்களுக்கு இந்த அற்புதமான சிகிச்சைக் கலை விரிவாகவும், இலகுவாகவும் சென்றடையும் என்ற நம்பிக்கையுள்ளது.

***-சன்னோய் விஜேரத்ன***
**(Sannoy Wijeratne)**

# ஜூலியன் அசாஞ்சே விடுதலை செய்யப்பட்டார்

ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்கா நடத்திய போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், ஊழல்கள் தொடர்பான ஆவணங்களை விக்கிலீக்ஸ் என்ற இணையதளத்தில் 2010 இல் வெளியிட்ட ஜூலியன் அசாஞ்சே, இங்கிலாந்து சிறையில் இருந்து ஜூன் 25ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் இராணுவ இரகசியங்களை வெளியிட்டதால், ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்காவிற்கு கொண்டு வரும் சட்ட நடவடிக்கைகளை அமெரிக்க அரசு தொடங்கியது. இதனால் இங்கிலாந்தில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் 2012 இல் அசாஞ்சே தஞ்சம் அடைந்தார். பின்னர் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரித்தானியா பொலிசாரால் கைது செய்யப்பட்டு இலண்டனில் உள்ள சிறையில்



அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் இங்கிலாந்து சிறையில் இருந்த அசாஞ்சே, அமெரிக்காவின் நீதித்துறையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொண்டார். அந்த ஒப்பந்தப்படி, அமெரிக்க இராணுவ இரகசியங்களை வெளியிட்ட குற்றத்தை அசாஞ்சே ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். குற்றத்திற்கு 62 மாதங்கள் (1,860 நாட்கள்) சிறை தண்டனை விதிக்கப்படும். ஆனால், அசாஞ்சே ஏற்கெனவே 1,901 நாட்கள் இங்கிலாந்து சிறையில் இருந்துள்ளதால், அவரை விடுதலை செய்வதற்கு அமெரிக்க நீதித்துறை ஒப்புக்கொண்டது.

இதையடுத்து, இங்கிலாந்தில் இருந்து அசாஞ்சே விமானம் மூலம் பசுபிக் பிராந்தியத்திலுள்ள அமெரிக்காவின்

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**


# உலகின் அணு ஆயுதங்கள்: சுவீடன் நிறுவன ஆய்வறிக்கை

**ஸ்**டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (Stockholm International Peace Research Institute - SIRPI) என்ற சுவீடன் நாட்டு நிறுவனம் ஜூன் 17 அன்று உலக அணு ஆயுதங்கள் தொடர்பான அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது. அதில் உலக நாடுகளின் வசம் உள்ள அணு ஆயுதம் குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

உலகத்தில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், வட கொரியா, இஸ்ரேல் ஆகிய ஒன்பது நாடுகள் அணு ஆயுத சக்தியை கொண்டுள்ளன. அந்த வகையில் இந்த நாடுகளின் வசம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை ஆண்டுதோறும் ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த ஆய்வறிக்கை பிரான்ஸிடம் 290, பிரித்தானியாவிடம் 225, இஸ்ரேலிடம் 90 மற்றும் வட கொரியாவிடம் 50 அணு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறுகின்றது.

பாகிஸ்தானைக் காட்டிலும் இந்தியாவின் வசம் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தியாவின் கைவசம் உள்ள அணுத்தளவாடங்களின் எண்ணிக்கை 172 என உள்ளது. இது கடந்த ஜனவரி மாத கையிருப்பின் தகவல். பாகிஸ்தான் வசம் உள்ள அணுத்தளவாடங்களின் எண்ணிக்கை




170 என உள்ளது.

கடந்த 2023 இல் இந்தியா தனது அணு ஆயுதங்களை விரிவு செய்ததாகவும், இதற்கு நவீன முறையை பின்பற்றியதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. நீண்ட தூரத்தில் உள்ள இலக்கை எட்டும் வகையில் அணு ஆயுதம் சார்ந்த மேம்பாடுகளை இந்தியா மேற்கொண்டு உள்ளதாகவும் தகவல்.

உலகளவில் ரஷ்யா (5580) மற்றும் அமெரிக்கா (5044) ஆகிய இரு நாடுகளின் வசம் அணு ஆயுதங்கள் அதிகம் உள்ளன. மேலும், உலகின் ஒட்டுமொத்த அணு ஆயுத கையிருப்பில் சுமார் 90 சதவீதத்தை இந்த இரண்டு நாடுகளும் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுடன் ஒப்பிடும் போது சீனாவின் வசம் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே உள்ளது.

கடந்த ஓராண்டில் உலக நாடுகளின் வசம் ஒட்டுமொத்தமாக அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 13 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்காக கடந்த ஓராண்டில் மட்டும் உலக நாடுகள் சுமார் 91.3 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளன. இதில் கடந்த ஆண்டில் மட்டும் இந்தியா சுமார் 2.7 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. முதலிடத்தில் உள்ள அமெரிக்கா 51.5 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. இரண்டாம் இடத்தில் உள்ள சீனா 11.9 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது.

உலகளவில் தற்போது 12121 அணுத்தளவாடங்கள் (Warheads) உள்ளன. இதில் செயல்படுத்தக்கூடிய நிலையிலுள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 9,585 ஆக உள்ளது. இதில் சீனா வசம் சுமார் 500 அணு ஆயுதங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 410 ஆக இருந்துள்ளது.

**9ம் பக்கத்தொடர்ச்சி...**

தொடர்பு ஏற்படுத்தித் தருவதற்கு மறைமுகமாக பணம் கேட்டனர். அவர்கள் இப்பொழுதும் அங்கே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர்'' என மனோகரன் கூறுகின்றார். அவர்கள் யாரென்பதைக் கூற மனோகரன் மறுத்துவிட்டார்.

மேலும் அவர் கூறுகையில்,

“யாராவது பிரபாகரனை கௌரவிக்க விரும்பினால், இலங்கையில் வாழும் எமது மக்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்துங்கள். போரினால் பாதிக்கப்பட்ட பல தமிழர்கள் வறுமையால் பாதிக்கப்பட்டு உள்ளதுடன், தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குச் சிரமப்படுகிறார்கள். போரினால் பாதிக்கப்பட்ட இந்த மக்களின் வாழ்க்கையை மீளவும் கட்டியெழுப்புவதற்கு உங்கள் வளங்களையும் முயற்சிகளையும் பயன்படுத்துங்கள். இதைத் தமிழ் சமூகத்துக்குச் செய்வதன் மூலமே எனது சகோதரனின் இலட்சியத்தைப் பாதுகாக்க முடியும்'' எனவும் மனோகரன் தெரிவித்துள்ளார்.

(கொழும்பிலிருந்து வெளியாகும் ‘டெயிலி மிரர்’ (Daily Mirror) பத்திரிகையில் வந்த செய்தியின் சாராம்சம்)

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

வடக்கு மெரினா தீவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அந்த நீதிமன்றத்தில் அமெரிக்க இராணுவம் குறித்த இரகசிய ஆவணங்களை வெளியிட்ட குற்றத்தை அவர் ஒப்புக்கொள்வார். பின்னர், ஏற்கனவே இங்கிலாந்தில் அவர் சிறைத் தண்டனை அனுபவித்த காலத்தை கணக்கில் எடுத்து, அவரை அமெரிக்க நீதிமன்றம் வழக்கில் இருந்து விடுதலை செய்ய உள்ளது. இதனை தொடர்ந்து ஜூலியன் அசாஞ்சே தனது சொந்த நாடான அவுஸ்திரேலியா செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**முன்பக்கத்தொடர்ச்சி…**

ஏகாதிபத்தியத்தால் சுரண்டலில் ஈடுபடாமல் உயிர்வாழ முடியாது. சுரண்டலில் ஈடுபடுவதானால் உலக நாடுகளை ஏதாவது ஒரு வழியில் ஆதிக்கம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அந்த நாடுகளின் வளங்களையும், மூலதனத்தையும் சுரண்ட முடியும்.

அதற்காக அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய அமைப்பு தமது சுரண்டலுக்காக உலகின் இரண்டு பெரிய நாடுகள் மீது கண் வைத்தது. அதில் ஒரு நாடு சோவியத் யூனியன் மற்றையது சீனா. இரண்டுமே சோசலிச நாடுகள். மிகப்பெரிய நிலப்பரப்பும், வளங்களும், மக்கள் தொகையும் (பெரிய சந்தையும்) கொண்ட நாடுகள் எனவே முதலில் ஏகாதிபத்தியம் திட்டமிட்ட முறையில் உள்ளிருந்தே முதலாளித்துவ மீட்சியை ஏற்படுத்தி சோவியத் யூனியனின் சோசலிச அமைப்பைக் கவிழ்த்தது. அத்துடன் நிற்காது, சோவியத் யூனியனின் சமஸ்டி அமைப்பைச் சிதைத்து, அதன் பல்தேசிய குடியரசுகளை தனித்தனி நாடுகளாக்கியது. அதன் மூலம் ரஸ்யாவை பலவீனப்படுத்தி தனது காலனியாக்கலாம் எனக் கனவு கண்டது.

ஆனால், பல குடியரசுகள் சோவியத் யூனியனை விட்டுப் பிரிந்து போனாலும், இன்னமும் ரஸ்யா என்ற நாடு நிலப்பரப்பிலும், வளத்திலும், மக்கள் தொகையிலும் பெரியதொரு நாடாகவே எழுந்து நின்றது. அது மாத்திரமல்லது, முன்னர் தன்னுடன் பனிப்போரில் ஈடுபட்ட அமெரிக்காவுக்கு எதிராகவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகவும் வலிமையுடன் நின்றது. அதன் மூலம் ரஸ்யா சோசலிச நாடாக இருந்தபோது மட்டுமல்லாது, முதலாளித்துவ ரஸ்யாவாக மாறிய பின்னரும் கூட மற்றைய உலக வல்லரசுகளுக்கு சளைக்காத ஒரு சக்தி என்பதை எடுத்துக் காட்டியது. அது மட்டுமல்லாது, அமெரிக்காவின் உலக ஆதிக்கத்துக்கு எதிரான ஒரு அரணாகவும் ரஸ்யா மாறியது.

ரஸ்யாவின் இந்த வலிமையை தகர்ப்பதற்காகவே ரஸ்யாவுக்கு அண்டையிலுள்ள உக்ரைனில் ஒரு நவ பாசிச அரசை உருவாக்கி, அந்த நாட்டை நேட்டோ இராணுவக் கூட்டணியில் இணைத்துக்கொண்டு, ரஸ்யா மீது தாக்குதல் நடத்தி, அதைப் பலவீனப்படுத்தி, இறுதியில் தமது காலனியாக்கலாம் என அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் திட்டம் போட்டது.

ஆனால், 'வெள்ளம் வருமுன் அணை கட்டுவது' போல, ரஸ்யா முந்திக் கொண்டதால், இன்று அது ரஸ்ய – உக்ரைன் போராக உருவெடுத்துள்ளது. இதுவரை காலமும் உக்ரைனின் பின்னால் மறைந்து நின்று கொண்டு ரஸ்யாவுடன் போர் நடத்தி வந்த ஏகாதிபத்தியம், இப்பொழுது ரஸ்யாவுடன் நேரடியாக மோதுவதற்குத் தயாராகி வருகிறது. அப்படி நிகழ்ந்தால், அது மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கலாம் என, சில அரசியல் ஆய்வாளர்களும், இராணுவ ஆய்வாளர்களும் கருதுகின்றனர். அத்தகையதொரு சாத்தியத்தை நிராகரித்து விடவும் முடியாது.

இன்னொரு பக்கத்தில் ஏகாதிபத்தியம் சீனா மீது வைத்திருந்த குறியும் தவறிப்போய் உள்ளது. சோசலிச சீனாவின் சிற்பி மாஓ சேதுங்கின் மறைவுக்குப் பின்னர் சீனா முதலாளித்துவப் பாதையில் சென்று நலிவுற்று விடும் என ஏகாதிபத்தியம் கணக்குப் போட்டது. அதற்குப் பின்னர் தனது ஆட்டத்தை சீனாவில் தொடங்கலாம் எனவும் திட்டம் போட்டது. ஆனால் சீனாவைப் பொறுத்தவரை கம்யூனிஸ்ட் கட்சியே அங்கு தலைமைச் சக்தியாக இருந்தபடியால், மாஓவுக்குப் பின்னர் தலைமைக்கு வந்த டெங் சியாவோபிங் சரியான நேரத்தில் சீனப் பொருளாதாரத்தை சோசலிச சந்தைப் பொருளாதாரமாக மாற்றியதன் மூலம், இன்று சீனா அமெரிக்காவுக்கே சவால் விடுமளவுக்கு பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக வளர்ந்து நிற்கிறது.

அதன் காரணமாகவே இன்று அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் சீனாவை உள்ளிருந்தும் வெளியில் இருந்தும் சீர்குலைக்க முயல்கின்றன. ஒரு பக்கத்தில் சீனாவின் திபெத், சிங்கியாங், ஹொங்கொங் பிரதேசங்களில் சீன அரசு மனித உரிமைகளை மீறுகிறது எனப் பிரச்சாரம் செய்யும் ஏகாதிபத்தியம், மறுபக்கத்தில் சீனாவின் தாய்வான் தீவில் உள்ள அரசாங்கத்தை தனி நாடாக அங்கீகரிக்க முயல்வதுடன், பிலிப்பைன்சை தூண்டிவிட்டு சீனாவுடன் கடல் எல்லை சம்பந்தமாக ஒரு மோதலை உருவாக்கவும் முயல்கின்றன.

குறிப்பாக, தாய்வான் பிரச்சினையை வைத்து சீனாவை ஒரு யுத்தத்தில் (ரஸ்ய – உக்ரைன் யுத்தம் போல) இழுத்துவிட முயல்கின்றன. அதன் மூலம் சீனாவின் பொருளாதார வலிமையையும் இராணுவ வலிமையையும் பலவீனப்படுத்த முடியும் என்பது ஏகாதிபத்தியத்தின் எதிர்பார்ப்பாகும். அதற்காகவே அமெரிக்கா யப்பானையும் ஆஸ்திரேலியாவையும் இணைத்துக் கொண்டு சீனாவுக்கு எதிராக ஒரு இராணுவக் கூட்டணியை உருவாக்கியுள்ளதுடன், அதில் இந்தியா, தென் கொரியா, தாய்வான் என்பனவற்றை இணைத்துக் கொள்வதற்கும் முயற்சித்து வருகின்றது.

இன்னொரு பக்கத்தில், ஏகாதிபத்தியம் இஸ்ரேல் – பலஸ்தீன போர் மூலம் மத்திய கிழக்கிலும் ஒரு போர்முனையைத் திறந்துள்ளது. பொதுவாகவே இஸ்லாமிய மக்கள் தேசிய உணர்வு அடிப்படையிலும், மத உணர்வு அடிப்படையிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு மிக்கவர்கள். அவர்களது முன்னணி ஈட்டிகளாக இன்று மத்திய கிழக்கில் ஈரான், சிரியா, லெபனான், யெமன், பலஸ்தீனம் போன்ற நாடுகள் இருக்கின்றன. முன்பு ஈராக்கும் லிபியாவும் அந்த முன்னணிப் பாத்திரத்தை வகித்திருந்தன. அதற்காகவே அந்த நாடுகளை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இணைந்து துவம்சம் செய்தன.

இஸ்லாமிய உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை வன்முறையின் மூலம் முறியடிக்கவே சியோனிச இஸ்ரேலை பிரித்தானியாவும் மேற்கத்தைய நாடுகளும் பாலஸ்தீன மண்ணில் ஆக்கிரமிப்பின் மூலம் உருவாக்கின. பின்னர் அந்த அணியில் அமெரிக்காவும் இணைந்து கொண்டது. இன்று இந்த சக்திகள் உக்ரைனைப் பயன்படுத்தி ரஸ்யாவை ஒழித்துக்கட்ட முயல்வது போல, இஸ்ரேலைப் பயன்படுத்தி முழு அரபு உலகையும் அழிக்க முயல்கின்றன. அதன் மூலம் அரபு நாடுகளில் அபரிமிதமாகக் காணப்படும் எண்ணெய் வளத்தைத் தங்கு தடையின்றி சூறையாடுவதும் அவர்கள் நோக்கம்.

தற்போதைய உலக நிலைமையைத் தொகுத்துப் பார்த்தால், உக்ரைன் – ரஸ்யப் பகுதியிலும், இஸ்ரேல் – காஸா பகுதியிலும், ஏகாதிபத்தியம் இரண்டு போர்முனைகளைத் திறந்துள்ளது. சீனாவை மையமாக வைத்து இன்னொரு போர்முனையைத்

திறப்பதற்கும் ஏகாதிபத்தியம் முயற்சிக்கிறது. அந்தப் போர்முனையும் திறக்கப்பட்டால், முழு அளவிலான மூன்றாம் உலகப் போர் வெடிப்பதற்கான சாத்தியம் உண்டு.

ஏனெனில், தன்நாட்டு மக்களை மட்டுமின்றி, உலக நாடுகளையும் சுரண்டினால்தான் ஏகாதிபத்தியத்தால் துடிப்புடன் உயிர்வாழ முடியும். அதற்கு உலகை ஆதிக்கம் செய்வது அவசியம். ஆனால் முன்னைய காலங்கள் போல நாடுகளை ஆயுத முனையில் கைப்பற்றி காலனித்துவ ஆட்சி நடத்த முடியாது. எனவே, ஏகாதிபத்தியம் இப்பொழுது நவீன உத்திகளைக் கையாள எத்தனிக்கிறது.

அதாவது, நாடுகளுக்கிடையிலான தகராறுகளைப் பயன்படுத்துவது, மனித உரிமைகள் – ஜனநாயகம் என்ற கருதுகோள்களைப் பயன்படுத்துவது, சர்வதேச நிதி மற்றும் மூலதன நிறுவனங்களைப் பயன்படுத்துவது, பொருளாதார – வர்த்தகத் தடைகளைப் பயன்படுத்துவது என்பவை ஒருவகை உத்தி. இருந்தாலும் தேவையேற்படும் பட்சத்தில் மறைமுக யுத்தங்களைச் செய்வதுடன், நேரடி யுத்தங்களைச் செய்வதற்கும் ஏகாதிபத்தியம் தயாராகி வருகிறது.

ஆனால், முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு ஏகாதிபத்தியம் இன்று பலவீனப்பட்டுப்போய் உள்ளது. ஏகாதிபத்தியம் இதுவரை இரண்டு உலகப் போர்களைத் தொடங்கி நடத்தியுள்ளது. அவை இரண்டும் முழு ஏகாதிபத்திய அமைப்புக்கும் அழிவையே கொணடு வந்தன.

முதலாவது உலகப் போர் உலகப் பரப்பளவில் ஆறில் ஒரு பகுதியான ரஸ்யாவில் உலகின் முதலாவது சோசலிச அரசை ஸ்தாபிப்பதில் போய் முடிந்தது.

இரண்டாவது உலகப் போர் ஆசியாவில் சீனா, வியட்நாம், கொரியா ஆகிய நாடுகளிலும், முழு கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் (கிழக்கு ஜெர்மனி, போலந்து, செக்கோஸ்சிலோவாக்கியா, யூகோஸ்சிலோவாக்கியா, ஹங்கேரி, ரூமேனியா, அப்பேனியா, பல்கேரியா) சோசலிச அரசுகளைத் தோற்றுவித்தது.

ஏகாதிபத்தியம் இன்னொரு உலக யுத்தத்தை – மூன்றாவது உலக யுத்தத்தை – தொடங்குமானால், அது ஏகாதிபத்தியத்துக்கு இறுதிச் சமாதியைக் கட்டுவதுடன், உலகம் முழுவதும் சோசலிச அரசுகள் தோன்றவும் வழிவகுக்கும்.

○

"நாடுகள் சுதந்திரத்தை விரும்புகின்றன, தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன, மக்கள் புரட்சியை விரும்புகின்றனர். இதுதான் இன்றைய உலகின் பிரதான போக்காகும்."

–மாஓ

"Countries Wants Independence, Nations Wants Liberation, People Wants Revolution."

-Mao

# அமெரிக்காவில் மீண்டும் கட்டாய இராணுவ சேவை

**அ**மெரிக்க அரசாங்கம் கட்டாய இராணுவ சேவை சட்டத்தை ஜூன் 14 அன்று அமுல்படுத்தியுள்ளது. இதன்படி அமெரிக்காவில் 18 முதல் 26 வயதுடைய இளைஞர்கள் கட்டாயமாக இராணுவ சேவையில் தங்களை பதிந்து கொள்ள வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. ஒரு வேளை இளைஞர்கள் கட்டாய இராணுவ சேவையில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளாமல் இருந்தால், இந்தச் சட்டத்தின்படி அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமெரிக்க அரசு மிரட்டியுள்ளது.

இந்த சட்டத்திருத்தத்தின் காரணமாக 18 வயது கடந்த இளைஞர்கள் தங்களின் எதிர்காலத்திற்கான வேலையை தாங்களே தேர்ந்தெடுக்கும் குறைந்தபட்ச உரிமையைக்கூட தற்போது இழந்துள்ளனர் என்று, ஜோ பைடன் அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனம் எழுந்துள்ளது. உலகளவில் பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ள உக்ரைன் – ரஷ்யா மற்றும் இஸ்ரேல் – பலஸ்தீன போர்ப் பதற்றங்களை தணிய விடாமல் தொடர்ந்து அமெரிக்கா தூண்டி வருகிற சூழலில், அந்நாட்டிலேயே அமுல்படுத்தியுள்ள கட்டாய இராணுவச் சட்டங்கள் பல சந்தேகங்களை எழுப்புவதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா முதன்முதலாக 1917 ஆம் ஆண்டு முதல் உலகப்போரின் போது தான் கட்டாய இராணுவ சேவைச் சட்டத்தை முதன்முதலில் கொண்டு வந்தது. பின்னர் அதனை 1920 இல் கைவிட்டு விட்டது. மீண்டும் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், 1940 ஆம் ஆண்டு இச்சட்டத்தை அமுல்படுத்தியது. இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்த பிறகு 1948 இல் இச்சட்டத்தை அமெரிக்கா மறுசீரமைப்பு செய்தது.

1975 ஆம் ஆண்டு கட்டாய இராணுவ சேவையை அமெரிக்கா சுயவிருப்ப அடிப்படையிலான சேவை என மாற்றியது. அதன் பிறகு 1980 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா தலைமையிலான கம்யூனிஸ்ட் ஆட்சி கவிழ்க்கப்படும் அபாயத்தை தடுக்க சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் நுழைந்தபோது, அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், மீண்டும் கட்டாய இராணுவ சேவையை நடைமுறைப்படுத்தினார். அப்போது கட்டாய இராணுவ சேவையை யாரேனும் மேற்கொள்ளவில்லை என்றால் 5 ஆண்டு சிறைத்தண்டனையும் 25,000 டொலர்கள் அபராதமும் விதிக்கப்பட்டது. மேலும் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடாத இளைஞர்களுக்கு அரசு வேலைகளில் சேர்வதற்கும், மாணவர் கல்விக் கடன் பெறுவதற்கும், ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கும் தடை விதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ள கட்டாய இராணுவ சட்டத்தை அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது இந்தச் சட்டத்தை அமுல்படுத்த அமெரிக்க இராணுவத்திற்கு 89,500 கோடி டொலர்கள் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

---

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

கண்ணாடியூடாகப் பார்க்க வேண்டியிருக்கும். காங்கிரஸ் தனியாக 99 தொகுதிகளையும், ஏனைய பங்காளி கட்சிகள் ஏனைய தொகுதிகளையும் பெற்று, பாரதிய ஜனதாவின் ஆதரவுத்தளத்தைப் பறித்துக்கொண்ட போதும், அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும்.

மோடியின் மூன்றாவது ஆட்சிக்காலம் பெருந்தொகை கவலைகளைக் கொண்டதாக இருக்கும். சிறுபான்மை அரசாக குறுகிப்போயுள்ள மோடி அரசுக்கு பல்வேறு சவால்கள் காத்திருக்கின்றன.

(கொழும்பிலிருந்து வெளியாகும் 'த ஐலன்ட்' (The Island) நாளிதழின் யூன் 6ஆம் திகதி ஆசிரியர் தலையங்கத்தின் முக்கியமான பகுதிகள்)

# 'பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் போர் நிறுத்தப்பட வேண்டும்'
## -சர்வதேச அமைதி மாநாட்டிற்கு சீனா அழைப்பு



பலஸ்தீனம் மீது கொடூரமான யுத்தத்தை இஸ்ரேல் நடத்தி வரும் நிலையில், இப்போரை முடிவுக்கு கொண்டு வர சர்வதேச அமைதி மாநாட்டிற்கு சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் அழைப்பு விடுத்துள்ளார்.

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில், மே 30 அன்று அரபு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாட்டில் பேசுகையில் ஜின்பிங் இந்த அறைகூவலை முன்வைத்துள்ளார்.

**'இரு நாடுகள்' கோட்பாடே அமைதிக்கு தீர்வு**

மக்கள் சீனக் குடியரசு – அரபு நாடுகள் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் தொடக்க உரை நிகழ்த்திய அவர், போர் தீவிரமடைந்து வரும் சூழலில் நீதி வழங்கப்படாமல் இருக்கக் கூடாது. 'இரு நாடுகள்' (பலஸ்தீனம், இஸ்ரேல்) என்ற தீர்வை மாற்ற முடியாது என்று கூறியுள்ளார்.

இஸ்ரேல் – பலஸ்தீன போரில் சீனாவும், அரபு நாடுகளும் தொடர்ந்து பலஸ்தீனத்துக்கு ஆதரவாக செயல்பட்டு வருகின்றன. மக்கள் சீனத்தின் கம்யூனிஸ்ட் அரசு நீண்டகாலமாக பலஸ்தீனர்களை ஆதரித்து வருவதோடு, ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் உருவாக்கி வரும் குடியேற்றங்களையும் கண்டித்து வருகிறது.

**மத்தியக் கிழக்கு நாடுகளுடன் நல்லுறவு**

இத்தகைய சூழலுக்கு இடையே, மத்திய கிழக்கு நாடுகளுடன் தொடர்ந்து நல்லுறவுகளை பேணி வருவதோடு, அந்நாட்டு பொருளாதாரத் தேவைகளுக்கும் முன்னேற்றத்திற்கும் சீனா முன்னுரிமை கொடுத்து வருகிறது.

மத்திய கிழக்கில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் விளையாட்டுத்துறை, சுகாதாரத்துறை என பல துறைகளில் சீனா பல நூறு கோடி டொலர்கள் முதலீடுகள் செய்து, அத்துறைகளின் உள்கட்டமைப்புகளையும் தொழில்நுட்பங்களையும் மேம்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

**முதலீடுகள் அதிகரிப்பு**

சூயஸ் கால்வாய் பொருளாதார மண்டலம் உள்ளிட்ட எகிப்து நாட்டின் பல அரசு திட்டங்களில் மக்கள் சீனம், கோடிக் கணக்கான டொலர்களை ஏற்கெனவே முதலீடு செய்துள்ளது. இதே போல துனீசியாவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் நாடுகளில் நான்காவது இடத்தில் சீனா உள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுடன் மின்னணு இயந்திரங்கள், 5ஜி தொழில்நுட்பம், பிற இணைய சேவை ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் தனது ஏற்றுமதியை சமீபகாலங்களில் சீன அரசு அதிகரித்துள்ளது.

**ஒப்பந்தங்களில் கையெழுத்து**

அந்த அடிப்படையிலேயே, இந்த உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக எகிப்து ஜனாதிபதி அப்தெல் ஃபத்தா (Abdel Fattah El-Sisi) – சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் (Xi Jinping) ஆகியோர் இருநாடுகளின் உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம், உணவு இறக்குமதி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்ப தற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

இந்த மாநாட்டின் போது தான் – பலஸ்தீனம் மீது கொடூரமான யுத்தத்தை இஸ்ரேல் நடத்தி வரும் நிலையில் – இப்போரை முடிவுக்கு கொண்டு வர சர்வதேச அமைதி மாநாட்டிற்கு சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் அழைப்பு விடுத்துள்ளார்.

**தூதரை திரும்பப் பெற்றது பிரேசில்**

பலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை தாக்குதல்களை பிரேசில் இடதுசாரி அரசாங்கம் தொடர்ச்சியாக கண்டித்து வருகிறது. மேலும் 'இரு நாடுகள்' தீர்வை அமுல்படுத்த வேண்டும் எனவும் சர்வதேச அரங்கில் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறது. இந்நிலையில் தான், தற்போது காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் இனப்படுகொலை தாக்குதல்களை கண்டித்து இஸ்ரேலுக்கான தனது தூதரை பிரேசில் திரும்பப் பெற்றுள்ளது. இதனை பிரேசில் அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

2023 இல் இஸ்ரேல் பலஸ்தீனர்கள் மீது போர் தொடங்கிய ஒரு மாதத்திலேயே கொலம்பிய இடதுசாரி அரசும், தனது தூதரைத் திரும்பப் பெற்றதுடன், 2024 மே மாதம் மூன்றாம் வாரம் பலஸ்தீனத்தின் ரமல்லாவில் தங்கள் நாட்டு தூதரகத்தையும் திறந்தது குறிப்பிடத்தக்கது.